www.tamilarangam.net


# களத்தில்


திருவள்ளுவர் ஆண்டு 2027 மடங்கல் 07 (21.08. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60


எமது மக்கள் மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. இதனின்றும் மக்களை விடுவித்து எமது மக்களின் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் நிலை நாட்டும்வரை நாம் ஆயுதம் ஏந்திப் போராடுவதைக் கைவிடமாட்டோம்.

- தமிழீழத் தேசியத் தலைவர்

# பட்டினிச்சாவால் தமிழரைக் கொல்ல உணவு, மருந்துக்கு திட்டமிட்ட தடை

## சிறிலங்கா அரசின் இனஅழிப்புத் தொடர்கிறது



## ★ பழுதடைந்த உணவுகளை அனுப்பி உலகைத் திசை திருப்ப முயற்சி!

வன்னியில் மலேரியா, 'செப்ரிசேமியா", செங்கமாரி, தோல் வியாதிகள் போன்ற கடும் கொடும் நோய்கள் பரவுவதனால் பாதிப்படைந்த நூற்றுக்கணக்கான மக்கள் மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கப்பெறும் செய்திகள் தெரிவிக்கின்றன. உணவு மற்றும் மருந்துத் தடை தொடர்ந்தால் மக்கள் பெருமளவில் பாதிப்புறவும் பலர் இறக்கவும் நேரிடும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இனஅழிப்புக் கொள்கையால் வன்னிப் பெருநிலப் பரப்பில் பெரும் அவல நிகழ்வுகள் இடம் பெறுகின்றன. உணவை, மருந்தை இனஅழிப்பின் ஓர் ஆயுதமாகப் பயன்படுத்தும் சிறிலங்கா அரசின் நடவடிக்கையால், இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்கள் பல கொடும் நோய்களுக்கு உள்ளாகி வருகின்றனர். இது பற்றி சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில், சரியான சுகாதார வசதி இல்லாமையாலும் மருந்து, உணவுத் தடையாலும் பல கொடிய நோய்க்கிருமிகள் மக்கள் மத்தியில் வெகு வேகமாகப் பரவி வருகின்றது. பல நூற்றுக்கணக்கான மக்கள் மல்லாவி வைத்தியசாலையில் இந்நோய்களால் பாதிப்புற்று சேர்ப்பிக்கப்பட்டிருப்பினும், அதற்குரிய சரியான மருந்துகள் இல்லாமையினால் உரிய

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## சிறிலங்காவின் தமிழினப் படுகொலை தமிழகத் தலைவர்களின் எதிரொலி

"சத்ஜெய" இராணுவ நடவடிக்கை எனும் பெயரில் சிறிலங்கா அரசு கிளிநொச்சியில் மேற்கொண்டு வரும் தமிழின அழிப்பை எதிர்த்து உடனடியாகத் தமிழக அரசும், இந்திய மத்திய அரசும் இத் திட்டமிட்ட இனஅழிப்பைத் தடுத்து நிறுத்த வேண்டுமெனக் கேட்டு, தமிழக மக்களும் அரசியல் கட்சிகளும் அரசியலில் ஈடுபடாத கட்சிகள், அமைப்புக்கள் என்பனவும் பல ஆதரவுப் போராட்டங்களையும் சிறிலங்கா அரசிற்கு எதிரான கண்டனக் கூட்டங்களையும் நடாத்தி வருகின்றன. ஈழத்தமிழர் நிலை குறித்து, தமிழக ஆளும் கட்சி தனது நிலைப்பாட்டை விளக்கியுள்ளதோடு, மக்களுக்கு தனது அனுதாபத்தையும் ஆதரவையும் தெரிவித்துள்ளது.

### தமிழக முதலமைச்சரின் அனுதாபம்

14-08-96 அன்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் தீரன்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## உண்மைக்கு மாறான செய்திகளுக்கு விடுதலைப் புலிகள் வன்மையான மறுப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் நற்பெயருக்குக் களங்கம் கற்பிக்கக்கூடிய முறையிலும் சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான ஆக்கிரமிப்பினை நியாயப்படுத்தக்கூடிய வகையிலும் உண்மைக்கு மாறான பல செய்திகளைச் சிறிலங்கா இராணுவ உளவுத்துறைப் பிரிவினர், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரப்பி வருகின்றனர். சிறிலங்கா அரசு, தமிழ் மக்களுக்குக் கொடுமைகளைச் செய்கின்ற நேரத்தில் வெளிநாட்டில் உள்ள சில செய்தி முகவர்களும் அறிந்தோ, அறியாமலோ இச் செய்திகளை வெளியிடுவதன்மூலம், சிறிலங்கா அரசின் ஆக்கிரமிப்புத் தன்மையின் விளைவுகள் மறைக்கப்படுவதற்குத் துணையாகி வருகின்றனர். இவ்வேளையில், வன்னிப் பெருநிலப்பரப்புக்கு உணவுடன் செல்லும் லொறிகளை விடுதலைப் புலிகள் கடத்திச் சென்றுவிடுகின்றனர் என்னும் முழுவதும் உண்மைக்கு மாறான செய்தியைப் பரப்புவதன் மூலம், விடுதலைப் புலிகளுக்கு மட்டுமல்ல, சிறிலங்காவால் திட்டமிட்ட முறையில் பட்டினிச்சாவு நிலைக்குத் தள்ளப்படும் அப்பாவித் தமிழ் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கப்படுகின்றது. இத்தகைய எந்தவொரு செயலுக்கும் விடுதலைப் புலிகள் எவ்வகையிலும் பொறுப்பாக இல்லை எனும் உண்மையை எடுத்துக் கூற விரும்புகின்றோம். மேலும், தமிழீழத்தேச தமிழ்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## மக்கள் புகலிடம் தேடி தமிழகத்திற்கு விரைவு

சிறிலங்கா அரசின் இனவெறித் தாக்குதலுக்கு அஞ்சி, தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் தற்போது தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். கிளிநொச்சி மீதான சிறிலங்காப் படைகளின் கண்மூடித்தனமான தாக்குதலைத்

தொடர்ச்சி 2 ம் பக்கம்...

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்நாட்டில் எழுச்சிப் பேரணிகளும் கண்டனக் கூட்டங்களும்

## சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம்

தமிழீழ மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும் சிறிலங்கா அரசின் தமிழினப் படுகொலையைக் கண்டித்தும் பாட்டாளி மக்கள் கட்சி, தமிழகம் தழுவிய போரட்டத்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக அறியப்படுகிறது. இதன் ஒரு கட்டமாக, கடந்த 12, 13ஆம் திகதிகளில் சென்னை குறளகம் அருகே பா.ம.கட்சியின் மகளிரணியினர் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். எனினும் தமிழ்நாட்டுக் காவல்துறையினர் இவர்களைக் கைதுசெய்து உண்ணாவிரதத்தை முறியடித்துவிட்டனர். துணிவுடனும் தியாக மனத்துடனும் தொடங்கப்பட்ட இச் சாகும்வரையிலான உண்ணாவிரதத்தில் 200 பெண்கள் மகளிர் அணித் தலைவி சக்தி கமலம்மாள் என்பவர் தலைமையில் பங்கெடுத்துக் கொண்டனர்.

### புகையிரத மறியல் போராட்டம்

மகளிர் அணியின் உண்ணாவிரதப் போராட்டத்தைப் காவற்றுறையினர் தடை செய்திருப்பினும், 17-08-96 அன்று புகையிரத மறியல் போராட்டம் ஒன்றை நடாத்தியுள்ளனர். இதனைப் பா.ம.கட்சியின் இளைஞரணி நடாத்தியிருந்தது. சிறிலங்கா மீது பொருளாதாரத் தடை விதிக்கக் கோரியே இம் மறியல் போராட்டம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பரந்துபட்ட போராட்டத்தை நடாத்த நடவடிக்கை

தமிழகத்தில் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகள், சட்ட மன்றத்தில் இடம்பெறாத கட்சிகள் – அமைப்புக்கள் என்பன ஈழத்தமிழர் விடயத்தில் ஆர்வமும் அக்கறையும் கொண்டு, சிங்கள அரசின் தமிழின அழிப்பு நடவடிக்கையை எதிர்த்து, பரந்துபட்ட போராட்டத்திற்குத் தம்மைத் தயார்ப்படுத்தி வருகின்றன. கடந்த 20ம் திகதி திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்றைத் திராவிடக் கழகம் நடத்திவுள்ளதாகவும், இதில் தமிழர் தேசிய இயக்கம், உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் உட்பட 30க்கும் மேற்பட்ட அமைப்புக்கள் பங்கெடுத்துக் கொண்டதாகவும் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் இன்று திருச்சியில் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளதாகவும் அறியப்படுகின்றது. தமிழகத்தில் வெளிவரும் அனைத்துப் பத்திரிகைகளும் அப்பாவித் தமிழர், சிங்கள அரசால் கொல்லப்படுவதை வன்மையாகக் கண்டித்து வருகின்றன.

### தமிழக மக்களிடம் வெளிப்பட்டுள்ள ஆதரவு உணர்வலைகள்

கடந்த சில ஆண்டுகளாக நீறுபூர்த்த நெருப்பாகத் தமிழக மக்களிடமிருந்து வந்த தமிழீழப் போராட்டத்திற்கான ஆதரவு உணர்வலைகள் இப்போது பெருமளவில் வெளிக் கொணரப்பட்டுள்ளது. அவ்வுணர்வுகளை அமைப்பு ரீதியாகத் திரட்டுவதிலும் பெரிய கட்சிகளையும் அதில் பங்கெடுக்கச் செய்வதிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தமிழகத்தில் இருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மலேசியாவிலும் ஈழத்தமிழர் படுகொலையைக் கண்டித்து மலேசியா வாழ் தமிழர்கள், கோலாலம்பூரிலுள்ள சிறிலங்காத் தூதரகத்திற்கு முன் கண்டனக் கூட்டத்தை நடாத்தவுள்ளதோடு, ஆட்சேப மனுவும் சமர்ப்பிக்கவுள்ளார்கள். ✷

# சிறிலங்காவின் தமிழின...

அவர்கள் தமிழக சட்டசபையில் எழுப்பிய கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மேல் நடந்த விவாதத்தில், "ஈழத்தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் கண்டனம் தெரிவிக்காவிட்டாலும், செத்துக் கொண்டிருக்கின்ற அப்பாவித் தமிழர்களுக்கு வருத்தம் தெரிவிக்கவாவது மத்திய அரசு முன்வரவேண்டும்" என முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் கோரினார். "இது தொடர்பாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், அகதிகளை வரவேற்பதைத் தவிர வேறுவழியில்லை" எனவும் கலைஞர் அவர்கள் தெரிவித்துள்ளார். "இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து பொதுக்கருத்தொன்றைத் தமிழகத்தில் உருவாக்க வேண்டும். அதை உருவாக்குவதற்காக அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை அரசு கூட்ட வேண்டும்" என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கேட்கப்பட்டிருக்கிறது.

### பாட்டாளி மக்கள் கட்சி ஆதரவுக் குரல்

பிரதான எதிர்க்கட்சியான பாட்டாளி மக்கள் கட்சி, பல உணர்வுபூர்வமான போராட்டங்களையும் கண்டனக் கூட்டங்களையும் தமிழகத்தின் பல பாகங்களிலும் மேற்கொண்டு வருகின்றது. அதன் நிறுவனர் டாக்டர் இராமதாஸ் அவர்களும், தலைவர் தீரன் அவர்களும் பல ஆதரவு அறிக்கைகளை வெளியிட்டுள்ளதோடு, ஈழத்தமிழர்களின் அவலம் போக்க தம்மால் முடிந்தளவு உழைப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். "இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்புக்காக உடனடியாகக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயம் தமிழகத்துக்குத்தான் உண்டு. வங்க தேசப் பிரச்சினை, ஆப்கான் விவகாரம், பாலஸ்தீன விடுதலைப் போராட்டம் ஆகியவற்றுக்கு மனிதாபிமான அடிப்படையில் ஆதரவு அளித்ததைப்போல் இப்பிரச்சினையிலும் இலங்கைத் தமிழர்களுக்குப் பாதுகாப்புத் தரவேண்டும். ஓமான் நாட்டிலிருந்து காயம் அடைந்து வருபவர்களுக்கு மும்பை மருத்துவமனையில் சிகிச்சை தருகிறோம். அதேபோல் இலங்கையிலிருந்து பாதிக்கப்பட்டு வரும் தமிழர்களுக்கு இங்கே சிகிச்சை அளிப்பதில் தப்பில்லை. இலங்கையிலிருந்து அகதிகளாக வருபவர்களுக்கு அளிக்கப்படும் உதவித்தொகை 150 ரூபாதான். ஐ.நா அகதிகள் இணையகத்தின் மூலம் கணிசமான தொகையை உதவித் தொகையாகப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். தொண்டு நிறுவனங்களைச் சார்ந்தவர்களும் பத்திரிகையாளர்களும் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். தமிழ் மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அ.தி.மு.கவின் அறிக்கை

"இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசு தலையிட வேண்டும். ஐ.நா மூலம் இலங்கை அரசை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்காகப் பல்வேறு அரசியல்கட்சிகள் திரட்டி, செஞ்சிலுவைச் சங்கத்திடம் கொடுத்து வைத்துள்ள பொருட்கள் பாழாகி வருகின்றன. இப்பொருட்களை இலங்கைத் தமிழர்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று அ.தி.மு.க. தலைவர் திருநாவுக்கரசு அவர்கள் அறிக்கை விட்டுள்ளார். ✷

# பட்டினிச் சாவால் தமிழரைக் கொல்ல...

சிகிச்சை செய்யமுடியாமல் இருப்பதாகவும், இந்நிலை தொடர்ந்தால் பலர் அநியாயமாக இறக்க நேரிடும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் 'செப்ரிசேமியா' எனும் நோயினால் இதுவரை 2 சிறுவர்கள் மல்லாவி வைத்தியசாலையில் இறந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். குடிநீருக்குக் கூட பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வைத்தியசாலையில் இடவசதிப் பற்றாக்குறையால் 600க்கும் 800க்கும் இடைப்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காகக் காத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சிறிலங்கா அரசின் கோரச் செயல்

சிறிலங்கா அரசின் சர்வதேச சட்டங்களை மீறிய இத் தடைகளினால் வன்னிப் பெருநிலப்பரப்பில் வாழும் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் சொல்லொணாத் துன்பத்தையும் அவலத்தையும் எதிர்கொண்டுள்ளனர். "தமிழ் மக்களுக்கு எதுவிதமான இராணுவத் துன்பங்களும் வர அனுமதிக்கமாட்டேன்" எனத் தேர்தல் வசனம் பேசிய சந்திரிகா இன்று அத்துன்பங்களையே இரட்டிப்பாக்கி தமிழ் மக்களைப் பட்டினி போட்டு அடிபணிய வைக்க முயல்கின்றார்.

இவ்வாறு இடங்களைக் கைப்பற்றி மக்களை தமது ஆக்கிரமிப்பிக்குள் கொண்டுவரும் முயற்சிகளால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்கள் உயிர்களைத் தாக்குப் பிடிப்பதையும் தடுக்கும்முகமாக இப்பிரதேசத்திற்கான உணவுத்தடையை விதித்துள்ள அரசு, தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம், ஒக்ஸ்பாம் உட்பட பல அரச சார்பற்ற நிறுவனங்களின் கோரிக்கையால் சில உணவு லொறிகளை வன்னிக்குச் செல்ல அனுமதித்தது. இருப்பினும் இதில் பெரும்பாலான உணவுவகைகள் பழுதடைந்த நிலையில் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. அத்துடன் லொறிச் சாரதிகளை தாண்டிக்குளம் தடைமுகாம் இராணுவத்தினர் கண்மூடித்தனமாகவும், மிகவும் கேவலமான முறையில் தாக்கியும் உள்ளனர். இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் சிறிலங்கா அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதெனினும் இதில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் மீது எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்பதுடன் இவ்வகையான துன்புறுத்தல்கள் தொடர்ந்தும் நடைபெறுகிறது.

இதனால் உணவு எடுக்க வவுனியா செல்வதற்கு பல சாரதிகள் தயங்குகின்றனர். உணவை அனுப்புவதாகக் கூறி உலகை ஏமாற்றிக் கொண்டு தன் படையினர் மூலம் அதனைத் தடுத்து வருகிறது சிறிலங்கா அரசு. தற்போது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வாகனங்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாகக் கூறியபின்னரே உணவு எடுக்க சாரதிகள் நம்பிக்கையுடன் சம்மதித்திருக்கின்றனர். கடைசியாக் கிடைத்த செய்திகளின்படி, ஒரு சில லொறிகளே வன்னிக்கு உணவு எடுத்து வர அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

இது மட்டுமல்லாமல் வவுனியா நகருக்குள் இருந்து தனிப்பட்ட வியாபாரிகள் உணவுகளை வன்னிப் பிரதேசத்துக்கு எடுத்துச் செல்லாதவாறும் சிறிலங்காப் படைகள் மிகக் கடுமையான சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். சொந்தத் தேவைக்கு எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருட்கள் கூட இராணுவத்தினரால் பறிமுதல் செய்யப்பட்டு அவர்களை துன்புறுத்தவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

15 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் எந்தவிதக் காரணம் கொண்டும் வவுனியாப் பிரதேசத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என இராணுவம் அறிவித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இப்படியிருக்க, இடம்பெயர்ந்த மக்கள் குளங்கள் அமைந்துள்ள பகுதிகளைச் சுற்றி மரநிழல்களில் தங்கியுள்ள பகுதிகளில் மக்களுக்கான தற்காலிக தங்குமிடங்களை அமைக்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. ✷

### மக்கள் புகலிடம் தேடி...

தொடர்ந்து, அங்கு வாழ்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து காடுகளிலும், வீதியோரங்களிலும் தங்கவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. சிலர் முல்லை மாவட்டத்திற்கும் சென்றுள்ளனர். தொடர்ந்தும் சிறிலங்கா அரசால், தமிழ் மக்களை அழிக்கும் நோக்குடன் முனைப்புடன் நடை முறைப்படுத்தப்படும் உணவு, மருந்துத் தடைகளால் தமிழ் மக்கள் தமிழகத்திற்குப் புகலிடம் தேடிச் செல்லும் நிலை உருவாகியுள்ளது. 10.08.96 அன்று 21 ஈழத்தமிழர்கள் இராமேஸ்வரம் சென்றுள்ளனர். இவர்களை, நடுக்கடலில் வைத்துத் தமிழக மீனவர்களே தமது படகுகளில் ஏற்றிப் பாதுகாப்பாகத் தமிழ்நாட்டுக் கரையில் விட்டுள்ளனர். தொடர்ந்து 17.08.96 அன்றிலிருந்து தொடர்ச்சியாக ஈழத்தமிழர்கள் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதுவரை 1000க்கும் அதிகமான மக்கள் தமிழகக் கரையைச் சென்றடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தமிழ்நாட்டுக் கரையில் வந்திறங்கும் மக்களைத் தமிழ்நாட்டுப் பொலிசார் சோதனை செய்வதால் கோபமும் கவலையும் அடைந்த இராமேஸ்வரத்தில் உள்ள 25,000க்கும் மேற்பட்ட மீனவர்கள், 5 நாள் பகிஸ்கரிப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகத் தமிழக நாளேடு ஒன்று செய்தி தெரிவித்துள்ளது.

இருப்பினும் தமிழ் நாட்டு அரசு, வந்திறங்கியுள்ள அகதிகளை உரியமுறையில் பராமரிப்பதாக

தொடர்ச்சி 4 ம் பக்கம்...

# உண்மைக்கு மாறான செய்திகளுக்கு...

மக்களுக்கும் – முஸ்லிம் மக்களுக்கும் இடையில், இனவன்முறைகளுக்குத் தூபமிடக்கூடிய வகையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் சிறிலங்காவின் கப்பற் போக்குவரத்து அமைச்சருமான அஸ்ரப்பைக் கொலை செய்யும் நோக்கில் இரு விடுதலைப் புலிகள் துவிச்சக்கரவண்டியில் குண்டு சுமந்து சென்றதாக, முஸ்லிம் மக்களை ஆத்திரமூட்டும் உண்மைக்கு மாறான செய்தியையும் சிறிலங்கா அரசு பரப்பி வருகின்றது. இதனை விடுதலைப் புலிகள் வன்மையாக மறுக்கின்றனர்.

இதுபோலவே, தென்கொரியாவுக்கு விஜயத்தை மேற்கொண்ட சனாதிபதி சந்திரிகா சிறிலங்காவிற்கான உதவிகளைப் பெற்று போரின் விளைவுகளை மேலும் அதிகரிக்கும் நோக்கில், திருகோணமலையில் உள்ள தென்கொரிய தொலைத்தொடர்பு வசதிகள் நிலையக் கட்டடத்தினை விடுதலைப் புலிகள் இருவர் கைக்குண்டு வீசித் தாக்க முற்பட்டனர் என்ற உண்மைக்கு மாறான தகவலைச் சிறிலங்கா இராணுவ உளவுத் துறையினர் வெளியிட்டுள்ளனர்.

இத்தகைய எச்சம்பவத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் எவ்வகையான தொடர்புகளும் இல்லை என்பதை வலியுறுத்திக் கூறி, சிறிலங்காவின் உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை உத்தியோக பூர்வமாக மறுக்கின்றோம்.

மேற்கூறிய 3 சம்பவங்களைப் போன்றே, சிறிலங்கா இராணுவ உளவுத்துறையினர் திட்டமிட்ட வகையில் உண்மைக்கு மாறான செய்திகளைப் பரப்பி, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் புனிதமான நோக்குக்கும், விடுதலைப் புலிகளின் நற்பெயருக்கும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் களங்கத்தை ஏற்படுத்தி வருகிறார்கள் என்பதை நாம் சுட்டிக்காட்டுவதுடன், இவ்விடயத்தில் நன்கு ஆராய்ந்து செயற்படும்படியும் உள்நாட்டு–வெளிநாட்டுச் செய்தி முகவர்களைக் கேட்டுக் கொள்கிறோம். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மக்கள் துன்பம் தீர ...

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவை ஆயுதமாக்கி தமிழ் மக்களை பட்டினிச் சாவுக்கு ஆளாக்கக்கூடிய பேரபாயத்தை சிறிலங்கா திட்டமிட்டுச் செயற்படுத்திவரும் இந்நேரத்தில், மனிதநேயத்துக்கு எதிரான குற்றச் செயலில் ஈடுபட்டுள்ள சிறிலங்காவைப் பகிரங்கமாக கண்டித்து சர்வதேச சட்டங்களின் புனிதத்துவத்தை பேணும்படி, ஐக்கியநாடுகள் சபையையும் – சர்வதேச நாடுகளையும் – புலம்பெயர் தமிழீழத் தேசமக்கள் சார்பில் நாம் வேண்டி நிற்கிறோம்.

மேலும், இத்தகைய நேரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின், சிறிலங்காவிற்கு ஆயுத உதவிகள் இராணுவப் பயிற்சிகள் அளிக்கக் கூடாதெனும் கோரிக்கைக்கு, அமெரிக்க அரசு ஆதரவாக பதிலளித்துள்ளமைக்கு நன்றி தெரிவிக்கும் நாம், "தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய விடுதலை இயக்கமாக அங்கீகரிப்பதும்" துன்பப்படும் தமிழ் மக்களுக்கு உதவுவதற்கான பெருவழியாக அமையும் என்பதை அமெரிக்க ஜனாதிபதி உட்பட அனைத்து சர்வதேசத் தலைவர்களுக்கும் சர்வதேச அமைப்புக்களுக்கும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இந்தியாவில், குறிப்பாக தமிழ்நாட்டில் தமிழீழத்தில் சிறிலங்காவின் சிங்களப் பெரும்பான்மை அரசால் உணவு மறுக்கப்பட்டு – வாழ்விடங்கள் வான்வழி தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு, மருத்துவ வசதிகள் புறக்கணிக்கப்பட்டு – துயரும் தம் தமிழ்ச் சகோதரர்களுக்காக, தமிழகப் பெண்களும் ஆண்களும் மேற்கொள்ளும் உண்ணாநோன்புகளையும் அனைத்துப் போராட்டங்களையும் உலகத் தமிழர் சமுதாயத்தில் பெரும் பகுதியினராகிய நாம் நன்றியுடன் வரவேற்கின்ற அதேநேரத்தில், தமிழக முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் கருணாநிதியிடம் தமிழர்களின் மாநில அரசு என்ற முறையில் தமிழக அரசு செய்யவேண்டிய கடமைகளை விரைவாகச் செய்யும்படி தமிழனினத்தின் பெயரால் வேண்டி நிற்கிறோம். அதேவேளை புதிய இந்திய மத்திய அரசு நீதியானதும் ஏற்புடையதுமான மாற்றங்களை இந்தியாவின் தென்னாசிய கொள்கைகளில் விரைவாகச் செய்து – தென்னாசியாவின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் – ஒவ்வொரு தேசமக்களதும் தேசிய இனங்களினதும் நல்வாழ்வுக்கும் – உத்தரவாதமும் துணையும் வழங்குமாறு வேண்டிநிற்கிறோம்.

நேற்று யாழ். குடாநாட்டிலும், அதற்கு முன்னர் அம்பாறை–மட்டக்களப்பு–திருமலை மாவட்டங்களிலும், ஏன் பத்திமூன்று ஆடி இனஒழிப்புக் கலவரத்தில் தமிழீழத்திற்கு வெளியே வாழ்ந்த தமிழர்கள் மீதும் தொடுக்கப்பட்ட சிறிலங்கா அரசின் மக்கள் மீதான போரின் ஒரு தொடர் நிகழ்ச்சியே இன்று கிளிநொச்சியிலும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய நாடுகள் பொதுச்சபை செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலியின் கூற்றுப்படி, "ஆயுதப் போராட்டங்களுக்கு மத்தியில் வாழும் மக்கள்மீது இத்தகைய குற்றச் செயல்கள் தற்செயலான இராணுவ அரசியல் தவறுகளினால் நிகழ்த்தப்படுவதில்லை. மாறாக, திட்டமிட்ட நோக்குடன் செயற்படுத்தப்படுபவை. ஆகவே, இத்தகைய கொடிய குற்றச் செயல்களை செய்பவர்கள் மீது சர்வதேசச் சட்டங்கள் மூலம் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்."

மக்கள் மீதான போர் தொடுக்கப்பட்டு, அவர்களது உயிர் உடல் உடைமைகளும் உட்கட்டுமானங்களும் திட்டமிட்ட வகையில் இனஅழிப்பு – இனத்துடைப்பு நோக்குகளுடன் இராணுவ நடவடிக்கைகளால் நாசமாக்கப்படும் பொழுது, மக்களே தமது தேசிய பாதுகாப்புக்கான இராணுவமாக மாறி சுதந்திரப் போராட்டத்தை காலனித்துவ வழிவந்த அந்நிய ஒடுக்குமுறைக்கு எதிராக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதுவே, தமிழீழ விடுதலைப் புலிகள் எனும் தேசிய விடுதலை இயக்கத்தின் தோற்றமாக உள்ளது. சுருக்கமாகச் சொன்னால், காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை அரசு, தமிழீழ மக்களை அவர்கள் தாயகத்திலேயே இரண்டாந்தரப் பிரஜைகளாகவோ – நாடற்றவர்களாகவோ மாற்றுவதற்கு கையாண்ட – கையாளும், அரசியல் – பொருளாதார – இராணுவ ஒடுக்கு முறைகளுக்கு எதிராக தமிழீழ மக்களே தமது தேசிய பாதுகாப்புக்கான ஆயுத எதிர்ப்பு இயக்கமாக மாறி நிற்கும் வரலாற்றுத் தரிசனம் தான் தமிழீழ விடுதலைப் புலிகள்.

இதனால்தான், விடுதலைப் புலிகளை அழிப்பதாகக் கூறிக்கொண்டு சந்திரிகா தமிழ் மக்களை இனஅழிப்புச் செய்கிறார். இன்று பட்டினிச் சாவுகளை எதுவித மனிதாபிமான உணர்வும் இன்றி உருவாக்க முயல்கிறார்.

ஆகவே, தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளை தேசிய இயக்கம்தான் என சர்வதேச உலகு அங்கீகரிப்பதும், தமிழீழ மக்களுக்கான உணவு உட்பட மனிதாபிமான உதவிகளை நேரடி மனிதாபிமானத் தலைமீட்டின் மூலம் வழங்குவதுமே அம்மக்களின் துன்பம் தீர்வதற்கான நிரந்தரவழி. இதை, சர்வதேச சமூகம் விரைவாக செய்யவேண்டுமென புலம்பெயர் தமிழீழ மக்கள் சார்பில் நாம் பகிரங்கமாகவே வேண்டுகோள் விடுக்கிறோம். ✷

# இலங்கை இனப்பிரச்சினை மீதான
# அமெரிக்காவின் பக்கச் சார்பு நிலைப்பாடு

அண்மைக்காலமாக இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்பாக அமெரிக்கா அதிக அக்கறை செலுத்திவருகின்றது. அரசியல், இராணுவ ரீதியில் ஒருதலைப்பட்சமாகச் சிறிலங்கா அரசிற்கு உதவும் செயல்களில் அதிதீவிரம் காட்டுகின்றது. முதலாவதாக, கிறீன் பெரேட் என்ற அமெரிக்க இராணுவத்தின் சிறப்புப் பிரிவு ஒன்று கொழும்பு வந்து சிங்களப் படையினருக்கும் போர்ப் பயிற்சி அளித்து வருகின்றது. இரண்டாவதாக, தமிழரின் போராட்ட நடவடிக்கைகளுக்குப் பயங்கரவாதம் முத்திரை குத்தும் செயலில் அது அறிக்கைகளையும் கண்டனங்களையும் வெளியிட்டு வருகின்றது. மூன்றாவதாக, அதே வேளையில், சிறிலங்காவிற்கு அழிவாயுதங்களை விற்பதில்லை என்ற அதன் முன்னைய முடிவை, இப்போது விலக்கிக் கொண்டதால் அமெரிக்க ஆயுதங்கள் சிறிலங்கா அரசுக்கு விற்பனையாகிக்கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல, தனக்கு அனுசரணையாக உள்ள நாடுகள் மூலமாகச் சிங்களப் படைகளுக்குச் சலுகை அடிப்படையில் அழிவாயுதங்களை விற்கும் விவகாரங்களில் அமெரிக்கா முன்னணியில் நின்று செயற்பட்டு வருகின்றது.

மனித உரிமை விவகாரம், உலகளாவிய ரீதியில் சமாதானம் என்ற கொள்கைகளை முன்வைத்துச் செயற்படும் அமெரிக்க அரசு, சிறிலங்கா–புலிகள் போர் நடவடிக்கைகள் தொடர்பாகப் பக்கச் சார்பு நிலையை எடுத்துத் தமிழரின் போராட்ட நடவடிக்கைகளை மட்டும் கண்டிக்க முயல்வது, எமக்கு ஆழ்ந்த கவலையை அளித்துள்ளது. அமெரிக்க அரசின் இந்தச் செய்கை காரணமாகச் சிங்கள அரசின் போர்க் குற்றங்களும் தமிழரின் போராட்ட தியாகங்களும் சர்வதேச சமூகத்தின் முன் மறைக்கப்படும் அபாயம் தோன்ற இடமுண்டு. *40 வருடகாலமாகப் பல்வேறு வழிகளிலும் தமிழினத்தை ஒழித்துவரும் ஒரு அடக்குமுறை அரசிற்கு அரசியல், இராணுவ ரீதியில் உதவிகள் பல புரிந்து ஒத்தாசையாக இருக்க முயலும் அமெரிக்காவின் நடவடிக்கை, ஈழத்தமிழர்களுக்கு வேதனையைக் கொடுத்துள்ளது.* அமெரிக்கா கடைப்பிடிக்கும் இந்த தவறான நிலைப்பாட்டிற்குக் பிரதான காரணம் தமிழ்–சிங்கள இனமுரண்பாட்டின் வரலாற்றையும் அதன் ஆழ அகலங்களையும் அது சரிவர அறிந்துவைக்காது இருப்பதேயாகும். தமிழரின் விடுதலைப் போராட்ட வரலாற்று அடிப்படைகளைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு, அடக்கும் சிங்கள அரசிற்கும் அடக்கப்படும் தமிழர்களுக்கும் இடையே ஒரு இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கான இராஜதந்திரங்கள் செய்வதற்குப் பதிலாக, அடக்குமுறை அரசிற்கு ஆதரவாகச் செயற்படும் அமெரிக்காவின் அணுகுமுறை தமிழ் மக்களுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது.

குடாநாட்டைச் சிங்களப் படையினர் ஆக்கிரமித்துவிட்ட இந்த நிலையிலும் கூட, பேச்சுவார்த்தை மூலமே அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என பல்வேறு தரப்பினரும் அரசை வலியுறுத்தும் இந்த நேரத்தில், சிங்களப் பேரினவாதத்தின் இராணுவ முனைப்புக்கு ஆதரவு நல்கும் விதமாக அமெரிக்க அரசு செயற்படுவது நல்லதல்ல. இதேவேளை, உதவிகள் என்ற போர்வையில் சிங்கள அரசிற்குப் போர் செய்யத் தேவையான நிதியை உலக நிறுவனங்கள் வழங்கும் விவகாரங்கள் பின்னணியிலும் அமெரிக்கச் செல்வாக்கு காணப்படுகின்றது. இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் பதிலாகச் சிங்களப் படைகளுக்கு அமெரிக்கா வழங்கும் போர்ப் பயிற்சிகளும் ஆயுதங்களும் மற்றும் பிரச்சாரங்களும் உதவிகளும் சிங்கள அரசுக்கு மேலும் மேலும் போர் வெறியை ஊட்டிவருகின்றன.

ஒட்டுமொத்தமாகச் சொன்னால், இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காகச் சிங்கள அரசு கடைப்பிடிக்கும் இராணுவ அணுகுமுறைக்கு அமெரிக்காவின் மேற்குறித்த செயற்பாடுகள் ஊக்கம் கொடுத்து உற்சாகம் ஊட்டுபவையாகவே காணப்படுகின்றன. இலங்கையின் இனப்பிரச்சினையில் அமெரிக்கா ஆக்க பூர்வமான முயற்சிகள் எடுப்பதற்கு வாய்ப்புக்கள் உண்டு. இந்த வகையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறிலங்கா அரசுக்கு ஒருதலைப் பட்சமாக வழங்கும் ஆதரவு நிலைப்பாட்டை அமெரிக்கா கைவிட்டு, இருபகுதிக்கும் இடையில் நடுவுத் தன்மையைக் கடைப்பிடித்து இனப் பிரச்சினையை அணுக வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். அத்துடன், சிறிலங்கா அரசின் இராணுவ வாதக்கொள்கைக்குச் சார்பாகத் தற்போது அமெரிக்கா கடைப்பிடிக்கும் கொள்கை, அதன் மனித உரிமை விவகாரம் மற்றும் சமாதானம் எனும் வெளிநாட்டுக் கொள்கைக்கு முரணானதாக உள்ளது என்ற உண்மையையும் அமெரிக்க அதிகாரிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். ஆகவே, நடுநிலைமையுடனும் இராணுவ தந்திர ரீதியிலும் தமிழ்–சிங்களப் பிரச்சினைகளை அணுகி இலங்கைத் தீவில் சமாதான சூழலை உருவாக்க அமெரிக்கா தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்பதே எமது மக்களின் விருப்பமாகும். அதைவிட்டுவிட்டு, சிறிலங்கா அரசின் போர்முனைப்புக்கு அமெரிக்கா ஆதரவும் உதவியும் வழங்குவது என்பது இனமுரண்பாட்டை மேலும் சிக்கலாக்குவதுடன், போரும் பெருகி அதனால் மனித அவலங்கள் விரியவும் வழிசமைத்துக் கொடுக்கும். ஆகவே இந்தத் தீவின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அமெரிக்கா ஒரு நடுநிலைமைக் கொள்கையையும் நிதானப் போக்கையும் கடைப்பிடித்து இராஜ தந்திர வழிமுறைகள் மூலமாகச் சமாதானத் தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதே ஈழத்தமிழர்களின் விருப்பமாகும். ✷

Liberation Tigers Of TAMIL EELAM
புலிகளின் குரல்

www.tamilarangam.net



# சுவிஸ் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

**சுவிசில் 04-08-1996 அன்று நடைபெற்ற மாவீரர் வெற்றிக் கிண்ண உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியும் மாபெரும் அதிஸ்ட லாபச் சீட்டிழுப்பும்**

தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளையினரால், லுட்சேர்ன் மாநிலத்தில் நடாத்தப்பட்ட 1996ஆம் ஆண்டிற்கான தேசிய மாவீரர் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, தேசியக் கொடியேற்றல் வைபவத்தோடு மௌன அஞ்சலி, மாவீரர் தூபியில் மாவீரர் விளக்கேற்றல் என்பவற்றோடு, போட்டிகள் 8.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டது. இச் சுற்றுப்போட்டியில் சுவிசின் பல மாநிலங்களிலிருந்தும் தமிழ் இளைஞர்களின் 25 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டும், சுமார் 2,000 இற்கும் மேற்பட்ட மக்கள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டும், போட்டியினைச் சிறப்பித்தனர். இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டு விளையாடிய அனைத்து விளையாட்டுக் கழகங்களும் தங்கள் கடமைகளைச் சரிவர உணர்ந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் பணியாளர்களுடன் ஒருங்கிணைந்து சிறப்பாகவும், பார்வையாளர்களைத் தம்வசப்படுத்தும் முகமாகவும் விறு விறுப்பாக விளையாடி அனைவரினதும் வரவேற்பையும் பெற்றிருந்தனர். இவ் ஆட்டத்தின் இறுதித் தேர்வில் சூரிச் சிற்றிபோய்ஸ் விளையாட்டுக் கழகமும் பாடுமீன் விளையாட்டுக் கழகமும் தேர்வுபெற்று சிறப்புற ஆடி சிற்றிபோய்ஸ் விளையாட்டுக் கழகம், பாடுமீன் விளையாட்டுக் கழகத்தை ஒன்றுக்குப் பூச்சியம் என்ற எண்களில் வெற்றியீட்டி, தேசிய மாவீரர் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது. 25 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டு விளையாடிய இப்போட்டியில், சிறந்த விளையாட்டு வீரர்களாகச் சிற்றிபோய்ஸ் விளையாட்டுக் கழகத்தில் இருந்து ஒருவரையும், பாடுமீன் விளையாட்டுக் கழகத்தில் இருந்து ஒருவரையும் தேர்வு செய்து சிறந்த விளையாட்டு வீரர்கட்கான பரிசில்கள் வழங்கப்பட்டதோடு, சிறந்த பந்து காப்பாளர்களாகவும் அவ்விரு அணிகளிலும் பந்து காப்பாளர்களாக விளையாடிய வீரர்கட்கும் பரிசில்கள் வழங்கப்பட்டதும், இத் தேசிய மாவீரர் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டு விளையாடிய அனைத்து விளையாட்டுக் கழகங்களிற்கும் சிறப்புப் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.




அதைத் தொடர்ந்து, செஞ்சோலை சிறுவர் காப்பக நிதிக்கான மாபெரும் அதிஸ்டம் பார்க்கும் நிகழ்வு நடைபெற்றது. அதிஸ்டலாபச் சீட்டிழுப்புக்காக 39,000 சுவிஸ் பிராங் பெறுமதியான புத்தம் புதிய சொகுசு வாகனம் ஒன்று பரிசாக வழங்குவதற்காக அம் மைதானத்தின் முன் பகுதியில் நிறுத்தப்பட்டிருந்தது. அங்கு குழுமி இருந்த மக்கள் ஆவலாக அச் சொகுசு வாகனத்தைப் பார்வையிட்ட வண்ணம் இருக்கையில், அதிஸ்டசாலிக்கான தெரிவில் 004642 எண்கள் அடங்கிய சீட்டைப் பெற்றிருந்த பாசல் மாநிலத்தைச் சேர்ந்த திரு. வைத்திலிங்கம் சந்திரன் அவர்கள், அச் சொகுசு வாகனத்திற்குரிய அதிஸ்டசாலியானார். அவர் அதிர்ஸ்டசாலியாகத் தேர்வு செய்யப்பட்டதும் 39,000 சுவிஸ் பிராங் பெறுமதியான அச் சொகுசு வாகனத்தின் ஆவணங்கள் அனைத்தும் அவரிடம் வழங்கப்பட்டு ஓரிரு நிமிடங்களில் அவ் இளைஞர், அச் சொகுசு வாகனத்தை விற்று அப்பணத்தை, போரினால் தாய் தந்தையை இழந்து வாழும் எம் செஞ்சோலைச் சிறுவர் காப்பக நிதிக்காக அனுப்புமாறு தனது சிறு உரையின் மூலம் குழுமி இருந்த மக்கள் முன்னிலையில் தெரிவித்ததுடன், மறுபடியும் அவ்வாகனத்தின் ஆவணங்களைத் தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை ஒருங்கிணைப்பாளர் திரு. த. மகேந்திரராஜாவிடம் கையளித்த வேளையில், மைதானத்தில் கூடியிருந்த மக்கள் அனைவரும் ஆனந்தமடைந்த நிலையில் திரு. வைத்திலிங்கம் சந்திரனைத் தூக்கியும் கைகுலுக்கியும், கட்டியணைத்தும் நன்றிகள் பலவற்றைத் தெரிவித்தனர். தேசப்பற்றுமிக்க அந்த இளைஞருக்குக் கூடியிருந்த மக்கள் அனைவரும் வாழ்த்துக்கள் பல கூற, அவ் ஆனந்த மகிழ்வோடு தேசியக் கொடி இறக்கப்பட்டு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவாக்கப்பட்டன. ✷

## வன்னி நிலவரம் பற்றி
## அவுஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்கு விளக்கக் கூட்டம்

தற்போதைய வன்னிப் பிராந்திய அகதிகளின் துயர நிலை பற்றியும் சிறிலங்கா அரசால் தொடர்ந்தும் தமிழ் மக்கள் மீது மிகவும் திட்டமிட்ட வகையில் நடாத்தப்படும் இனஅழிப்பு நடவடிக்கை பற்றியும் ஓர் அவசர விளக்கக் கூட்டம் அவுஸ்திரேலியா மெல்பேர்ண் நகரில் நடைபெற்றது. அவுஸ்திரேலிய தொழிற்கட்சி (எதிர்க்கட்சி) பாராளுமன்ற உறுப்பினர் இருவரும், கட்சி அமைப்பாளர் ஒருவரும் உட்பட 50 பேர் இவ் விளக்கக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர். இக் கூட்டத்தின் அவசியத்தையும் அவசரத்தையும் திரு. கிரேஸ்யன் விளக்கினார். வன்னிப் பெருநிலப்பரப்பில் செயற்படும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கிளிநொச்சிப் பகுதியில் சிறிலங்காப் படைகளின் தாக்குதலால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தது. இவ் அறிக்கையும் வாசிக்கப்பட்டது.

அவுஸ்திரேலிய தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செந்தூரன் அவர்கள் பேச்சுவார்த்தை முறிவடைந்ததற்கான காரணத்தை விளக்கினார்.

"War Without Witness" எனும் தொலைக்காட்சிச் சுருள் காண்பிக்கப்பட்டதுடன், அதனுடனிணைந்த கிளாலி மக்கட்பாதை உலங்கு வானூர்தித் தாக்குதலும் காண்பிக்கப்பட்டது. இவற்றைப் பார்வையிட்ட தொழிற்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள், இவ்வாறான சம்பவங்களைப் பார்த்து தாம் வேதனை அடைவதாகவும், தாம் எப்பொழுதும் தமிழர்களின் போராட்டத்தில் உள்ள நியாயத் தன்மையினை உணர்ந்துள்ளதாகவும், இப்பிரச்சினையைப் பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே தீர்க்க முடியும் என்பதில் தமக்கு அசையாத நம்பிக்கை உள்ளது எனவும், 'போர் மூலமாகச் சமாதானம்' தாமறிந்த பிணக்குகள் எதனிலும் ஏற்படுத்தப்படவில்லை எனவும் கூறினர்.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர், வடக்கு-கிழக்கில் நடைபெறும் பலவித மக்களுக்கெதிரான நடவடிக்கைகளைப் பற்றி, வெளியுலகிற்குத் தெரியப்படுத்தத் தம்மால் முடியாதிருப்பதற்கான ஒரேயொரு காரணம், தம்மை அங்கு மக்களுக்குச் சேவையாற்ற அனுமதிக்க மாட்டார்கள் என்பதேயாகும் என்றும் கூறினார். கொடுமைகளுக்கெதிராகக் குரல் கொடுக்க முடியாமலிருக்கின்றதே என்ற ஆதங்கத்துடன் பேசிய அவர், இதனை ஈடுசெய்வதற்காக அவுஸ்திரேலிய சாதாரண மக்களிடம் இவ் போராட்டத்தினைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றார்.

### அவுஸ்திரேலியாவில் கண்டனக் கூட்டம்

தமிழீழ மண்ணிலே, கிளிநொச்சி நகரின் மீது குண்டுகளையும் எறிகணைகளையும் வீசி மக்களைக் கொல்வதுடன் அவர்களின் சொத்துக்களையும் நாசப்படுத்தி அவர்களைச் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்த்துவதுடன் உணவுப் பொருட்களைத் தடை செய்து தமிழ் மக்களைப் பட்டினிச் சாவுக்கு இட்டுச் செல்லும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தைக் கண்டித்துச் சிட்னி நகரில் கண்டனக் கூட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில், வணக்கத்திற்குரிய பிதா அன்ரூ வில்லியம் உட்பட பலர் உரையாற்றினர். "தமிழக முதல்வர் கருணாநிதி அவர்களே! ஈழத்தமிழ் மக்களின் துயர் துடைக்க உதவுங்கள்", "சிறிலங்கா அரசே, தமிழ் மக்கள் மீதான விமானக் குண்டுவீச்சை நிறுத்து", போன்ற சுலோகங்கள் மக்களால் எழுப்பப்பட்டன. மக்களின் கையெழுத்துக்கள் இடப்பட்ட மகஜர்கள் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி, இந்தியப் பிரதமர் திரு. தேவ கௌடா, ஐ. நா. சபை பொதுச் செயலாளர் பூட்ரஸ் பூட்ரஸ் காலி, அவுஸ்திரேலிய பிரமதர் ஜோன் கோவார்ட், தென்னாபிரிக்க ஜனாதிபதி மண்டேலா ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ✷

## நெதர்லாந்தில் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

நெதர்லாந்து, Bewerwijk எனுமிடத்தில், கடந்த மாதம் (27-07-96) தாரகை விளையாட்டுக் கழகத்தினரால் சிநேகபூர்வமான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று நடாத்தப்பட்டது. இப்போட்டியின் வெற்றிக்கிண்ணத்தினை 'மேஜர் சலாம்' விளையாட்டுக் கழகத்தினர் (யேர்மனி) தமதாக்கிக் கொண்டனர். இரண்டாம் இடத்தைத் தாரகை விளையாட்டுக் கழகமும் மூன்றாம் இடத்தை இளம்வீரர் விளையாட்டுக்கழகமும் (யேர்மனி) பெற்றுக் கொண்டன. இவ் வெற்றிக்கிண்ணத்தைத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் நிதிப் பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர், தமிழர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் வழங்கினார்கள். பரிசளிப்பு நிகழ்வில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு நிதிப் பொறுப்பாளர், தமிழீழ மண்ணின் நிகழ்வு பற்றியும், புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் இப்போராட்டத்திற்கு செய்ய வேண்டிய பங்களிப்புக்கள் பற்றியும் உரையாற்றினார். தாரகை விளையாட்டுக் கழகத் தலைவரின் நன்றியுரையுடன் நிகழ்ச்சிகள் இரவு 10 மணியுடன் நிறைவுற்றது. ✷

# யேர்மனியில்

## மாவீரர் வெற்றிக்கிண்ண விளையாட்டுப் போட்டி-96
## ✷ 2,500க்கும் அதிகமான போட்டியாளர் பங்கேற்பு

கடந்த மாதம் (20-07-96) யேர்மன் டோட்முன்ட் நகரில் தமிழ் மாணவர் அமைப்பினர், யேர்மனி தழுவிய மாவீரர் வெற்றிக் கிண்ணப் போட்டியை நடாத்தினர். வருடா வருடம் நடைபெறும் இப்போட்டியில், இம்முறை 2500 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றினர். 9-06-96 அன்று ரொய்ஸ் நகரில் நடாத்தப்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியிலும் 13-07-96 அன்று டோட்முன்ட் நகரில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியிலும் யேர்மனியின் பல பாகங்களில் இருந்து 50ற்கும் மேற்பட்ட கழகங்கள் கலந்து கொண்டும் 1200ற்கும் மேலான விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டும் விளையாடினர். 07-07-96 அன்று ஸ்ருட்காட் நகரில் நீச்சல் போட்டியில் 200ற்கும் அதிகமான நீச்சல் வீரர்கள் பங்குபற்றினர். 20-07-96 அன்று டோட்முன்ட் நகரில் நடாத்தப்பட்ட மெய்வல்லுனர் போட்டியில் 1200ற்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் கலந்து சிறப்பித்தனர். மொத்தம் 2500ற்கும் அதிகமான விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய இவ்விழாவில், வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும் நடைபெற்றது.

மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் இராஜசுந்தரம் அவர்கள் மங்கள விளக்கேற்றி வைத்து நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடிப் பாட்டிசைக்க, தமிழீழ விடுதலைப் புலிகளின் யேர்மனிப் பிரதிநிதி திரு. சிவநேசன் அவர்கள் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மாணவர் அமைப்பின் கொடியை உலகத் தமிழர் இயக்க யேர்மனிப் பொறுப்பாளர் திரு. காங்கேயமூர்த்தி அவர்களும் யேர்மனிய தேசியக் கொடியை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் கா. சிவநாதன் அவர்களும் ஏற்றிவைக்க போட்டிகள் ஆரம்பமாகின. தமிழ் மாணவர் அமைப்பின் அணிவகுப்பு சிறப்பாக அமைந்து பலராலும் பாராட்டப்பட்டது. ஒப்பெற்குஸ், ரொய்ஸ், எசன் ஆகிய நகரங்களின் தமிழாலயங்கள் முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றன. உதைபந்தாட்டப் போட்டியில் முதற்பரிசை முன்சன்கிளப்பாக் நகரமும், கரப்பந்தாட்ட போட்டியில் முதற்பரிசை பாட்பிறிட்சால் நகரமும், ஒழுக்கத்திற்கான சுழல்வெற்றிக்கிண்ணத்தை முன்ஸ்ரர் நகரமும் பெற்றுக் கொண்டன. சுழல்வெற்றிக்கிண்ணத்தை விடுதலைப் புலிகள் யேர்மனிப் பிரதிநிதி திரு. சிவநேசன் அவர்கள் வழங்கினார். அங்கு உரையாற்றிய கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் முல்லை வெற்றிச் சமர் பற்றியும், நாட்டின் தற்போதைய நிலைப்பாடு குறித்தும் உரையாற்றினார். புனர்வாழ்வுக் கழக யேர்மனிக் கிளைப் பொறுப்பாளர் ஆனந்தராஜா அவர்கள் கொடியினை இறக்கி வைத்தார். யேர்மனியின் அனைத்துப் பாகங்களில் இருந்தும் வந்து கலந்து கொண்ட போட்டியாளர்களும் பார்வையாளர்களும் ஆர்வத்துடன் சுறுசுறுப்பாய் செயற்பட்டு மகிழ்ச்சியானதொரு பாசப்பிணைப்போடு கூடிய சூழலை உருவாக்கியிருந்தனர். ✷

## மக்கள் புகலிடம் தேடி...

அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அகதிகளின் வருகை தமிழகத்தில் அதிகரிக்குமிடத்து, தமிழக அரசும் இந்திய அரசும் ஈழத்தமிழர் விடயத்தில் கவனமெடுக்கவேண்டிய அவசியம் ஏற்படும் எனத் தமிழகச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தமிழீழ மக்களின் உணர்வுகளைப் தமிழகம் புரிந்துகொண்டு, பின்புலமாக அமையும் சூழல் கனிந்து வருகின்றதெனத் தமிழக அமைப்புக்களில் ஒன்றான உழைக்கும் மக்கள் விடுதலை இயக்க நிறுவனர் அருட்தந்தை சேவியர் அருள்ராஜ் அவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. ✷

www.tamilarangam.net



# தமிழர் தாயகக் கோட்பாட்டைச் சிதைக்க தீர்வுப் பொதியின் பின்னணியில் புதிய சதி!

## தமிழினம் அரசியல் விழிப்புணர்வோடு இருக்கவேண்டியது அவசியம்

தமிழரின் தாயகபூமியைத் துண்டாடி – அதன் ஒருமைப்பாட்டைச் சிதைத்து – முடிந்தளவுக்கு அதனைக் கபளீகரம்செய்வது என்பது, சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதுமே கைவிடமாட்டாத அரசியல் மூலோபாயமாக இருந்து வருகின்றது.

வெற்றிகரமாக அதனைச் சாதிப்பதன்மூலம், தமிழரின் தேசிய தனித்துவத்தையும் அவர்களது தாயகக் கோட்பாட்டையும் உடைத்தெறிந்து –

தமிமீழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே முறியடித்துவிடச் சிங்களப் பேரினவாதிகள் முழுமூச்சுடன் செயற்படுகின்றனர்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்மூலமும், குடியேற்றங்களுக்கான நிலப்பரப்பைத் தேர்ந்தெடுப்பதில் கடைப்பிடித்துவரும் சூழ்ச்சிகரத் தந்திரோபாயங்கள் மூலமும் –

கிழக்கு மாகாணத்தைச் சிங்களமயமாக்கிவிட வேண்டும் என்ற வெறியுடன், நீண்ட காலத்திட்டத்துடன், ஓய்வற்ற கடும் முயற்சியைச் சிங்களப் பேரினவாதிகள் செய்து வருகின்றனர்.

அல்லை – கந்தளாய்க் குடியேற்றத்திட்டத்தின் மூலமாக, கிழக்கு மாகாணத்தின் ஒருபகுதியில், பல்லாயிரம் சிங்களவர்கள் குடியமர்த்தப்பட்டனர்; தமிழரின் நிலத்தைப்பறிப்பதுடன், மட்டக்களப்பு – திருக்கோணமலை மாவட்டங்களின் நிலத்தொடர்பை அறுத்துவிடும் சதி ஒன்றின் அங்கமாகவும், அந்தக் குடியேற்றத்தைச் சிங்களப்பேரினவாதிகள் செய்தனர்.

இதுபோன்றுதான், வெலி ஓயா குடியேற்றத் திட்டத்தின்மூலம் வடக்கு–கிழக்கின் நிலத்தொடர்பைத் துண்டித்ததுடன், ஒருபகுதி நிலத்தையும் பேரினவாதிகள் அபகரித்துள்ளனர்.

தமிழரின் தாயகபூமியைப் பிரித்து – சிதைத்து –முடிந்தளவுக்குக் கபளீகரம் செய்வது என்பது, சிங்களப் பேரினவாதிகளின் அரசியல் மூலோபாயமாகும்.

இதை வெற்றிகரமாகச் சாதிப்பதன் மூலம், தமிழரின் தேசியத் தனித்துவத்தை– தமிழினத்தின் தேசிய பலத்தை – அழிக்க, பேரினவாதிகள் முயற்சிக்கின்றனர்: இதன்மூலம், விடுதலைப் போராட்டத்தின் வீரியத்தையும் சிதைத்துப் போராட்டத்தை முறியடிக்க முடியும் என்றும், பேரினவாதிகள் திடமாக நம்பிச் செயற்படுகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான 'தீர்வுத்திட்டங்கள்' என்ற போர்வையிலும் தமிழரின் தாயகபூமியைச் சிதைக்கும் 'கைங்காரியத்தில்', ஆட்சியாளர்கள் தீவிர ஈடுபாடு காட்டுகின்றனர்.

'தமிழர் – முஸ்லிம்கள் – சிங்களவர்களுக்கென்று தனித்தனியான நிர்வாக அலகுகள்' என்ற மூடுதிரைக்குள், கிழக்கை மூன்று துண்டுகளாகப் பிரித்துவிடும் ஒரு நாசகாரத்திட்டத்தை – ஜே.ஆரின் ஆட்சிக்காலத்திலிருந்து இன்றுவரை – நடைமுறைப்படுத்தச் சிங்கள ஆட்சியாளர்கள் துடிக்கின்றனர்.

சந்திரிகா அம்மையாரின் அரசாங்கம் வெளியிட்ட தீர்வுப்பொதியின் சட்டவரைவில், தமிழரின் தாயகபூமி பற்றி எதுவும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பது, இங்கே குறிப்பிடத்தக்கது. கிழக்கைத் துண்டாடும் சூழ்ச்சியினாலேயே, 'சிங்கள மக்களைத்திருப்திப்படுத்த', 'பேரினவாத சக்திகளைச் சாந்தப்படுத்த' என்று கூறிக்கொண்டு, சந்திரிக்கா அரசாங்கம் அவ்விதம் செய்தது.

தமிழர் – முஸ்லிம் பிரிவினையை ஏற்படுத்தியும், கூட்டணி உட்படத் தமிழ்க் குழுக்களுக்கு ஆசைகாட்டியும் மிரட்டியும் கிழக்கைத் துண்டாடிவிட, அம்மையார் தீவிர முயற்சிகளை எடுத்துவருகின்றார்.

இந்தச் சதித்திட்டத்தை அரங்கேற்ற இப்போது, ஒரு புதிய முயற்சியைச் சிங்களப் பேரினவாதிகள் ஆரம்பித்துள்ளனர்.

கிழக்கைத் தனிமாகாணம் ஆக்க வேண்டும் என்ற கோஷத்தை, கூட்டணியின் பிரதிநிதிகள் சிலரைக்கொண்டும் முஸ்லிம் கொங்கிரசைக் கொண்டும் எழுப்புவிக்க, அவர்கள் முயற்சிக்கின்றனர்.

கிழக்குத் தனித்திருந்தால் அது விரைவாக அபிவிருத்தி காணமுடியும் என்ற நச்சுவிதையை, பேரினவாதப் புத்திஜீவிகள் விதைத்து வருகின்றனர். இதேவேளை, படையினருடன் இணைந்து செயற்படும் தமிழ்க் குழுக்களில் சில, வடக்கு விரோதக் கருத்தை, கிழக்குவாழ் மக்கள் மத்தியிற் பரப்ப முயற்சிகள் செய்து வருகின்றன.

'தனி மாகாணம்' என்ற பெயருடன் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தெடுத்து – பின்னர் அதைப் பல்வேறு துண்டுகாளாகப் பிரித்து – தமிழரின் தாயகக் கோட்பாட்டைச் சுலபமாக முறியடித்துவிட முடியும் எனப் பேரினவாதிகள் நம்புகின்றனர்: அதைச் சாதிப்பதற்காக, தம்மால் இயன்ற அனைத்து வழிகளையும் அவர்கள் உபயோகிக்கின்றனர்.

இந்தச் சூழ்ச்சிகரச் சதிகளை, எச்சரிக்கை உணர்வுடனும் அரசியல் விழிப்புணர்வுடனும் இருந்து முறியடிக்க வேண்டிய கடமைப்பாடு, தமிழீழ மக்களிற்கு உள்ளது. ✷

# நிறைவேறிய இலக்கு என்ன?

கிளிநொச்சி நகர் மீது மேற்கொள்ளப்பட்ட 'சத்ஜெய" இராணுவ நடவடிக்கை நிறுத்தப்பட்டிருப்பதைச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்துள்ளன. இத்தாக்குதல் நடவடிக்கை நிரந்தரமாக நிறுத்தப்பட்டுவிட்டதா? அன்றி தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதா என்பது பற்றி உறுதியாகக் கூற முடியாதுவிட்டாலும் இடைநிறுத்தப்பட்டது உறுதியாகியுள்ளது. சிறிலங்காவின் இராணுவப் பேச்சாளரான பிரிகேடியர் சரத் முனசிங்க, கிளிநொச்சி மீதான தாக்குதலின் அடிப்படை இலக்கு பூர்த்தி அடைந்துள்ளதால் இப்பிரதேசத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலை நிறுத்துவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது என ராய்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு தெரிவித்துள்ளார். பிரிகேடியர் சரத் முனசிங்காவின் பேச்சுக்களில் உண்மைகள் எப்போதும் மிகக் குறைவாகவே இருப்பது என்பது வெளிப்படையானதே. ஆயினும், சரத் முனசிங்காவின் இக்கூற்றுக்கள் ஓரளவு உண்மை பொருந்தியது என்றே கூறலாம். ஏனெனில் தொடக்கப்பட்ட தாக்குதல் இடையில் நிறுத்தப்படுவதைக் கூறி, தமக்குத்தாமே அவமானத்தை ஏற்படுத்திக் கொள்ள ஒருபோதும் இராணுவம் முயலமாட்டாது. ஆனால் பிரிகேடியர் சரத் முனசிங்கா, இராணுவ நடவடிக்கையின் அடிப்படை இலக்கு நிறைவேறியதால் தாக்குதல் இடைநிறுத்தப்பட்டது எனக் கூறுவது, அவரின் வழமையான பேச்சேயாகும். ஏனெனில் தாக்குதல் இடை நிறுத்தப்பட்டதானது, புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலினாலேயே ஒழிய, அது சரத் முனசிங்க கூறுவதுபோன்று அடிப்படை இலக்கு பூர்த்தி செய்யப்பட்டதினால் அல்ல.

'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்கு அல்ல என தற்பொழுது முனசிங்க கூறினாலும், உண்மையில் கிளிநொச்சியைக் கைப்பற்றுவதற்காகவே அத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பதில் சந்தேகம் எதுவும் எவருக்கும் இல்லை. இதனை தாக்குதல் தொடக்கியவுடன் ,கொழும்பில் இருந்து வெளியாகிய செய்திகள் ஊர்ஜிதம் செய்தன. மேலும் அத்த னகலையில் கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவும் இதனை ஊர்ஜிதம் செய்திருந்தார். முல்லைத்தீவு இராணுவத்தளம் வீழ்ந்த ஆத்திரத்தில் இருந்த அவர், கிளிநொச்சி கைப்பற்றப்படும் என்று சூழுரைத்தார். பிரிகேடியர் சரத் முனசிங்க, தற்பொழுது கூட கிளிநொச்சியை நோக்கிப் படையெடுக்க இராணுவத்தினர் தயார் நிலையில் உள்ளனர் எனக் கூறுவதில் இருந்து இராணுவத் தாக்குதலின் இலக்காகக் கிளிநொச்சியே இருந்தமை வெளிப்படையானது. ஆகையினால் இராணுவம் தனது அடிப்படை இலக்கை அடைந்ததினால் தாக்குதலை நிறுத்திக்கொண்டது என்பது, இராணுவ நோக்கில் சரியானதோ அன்றி ஏற்புடையதான விளக்கமாகவோ இல்லை. அதாவது இராணுவம் கூறுவது போன்று, புலிகளின் நிலைகளை அழிப்பதோ சேதப்படுத்துவதோ சாத்தியமாகவில்லை என்பது மட்டுமல்ல, கிளிநொச்சி நகரையும் இராணுவத்தால் இதுவரை கைப்பற்ற முடியவில்லை. இராணுவ இலக்கு நிறைவேறாவிட்டாலும் சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான பழி தீர்க்கும் நடவடிக்கைகள் ஓரளவு நிறைவேறியுள்ளது என்றே கொள்ளலாம்.

முல்லைத்தீவு படைத்தளத்தின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்டிருந்த வெற்றிகரமான தாக்குதலானது சிறிலங்கா அரசிற்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மிகப் பெரிய, புதிய பரிணாமம் ஆக அமைந்த இத்தாக்குதலுக்கு வஞ்சம் தீர்க்கவென கிளிநொச்சி மீது தாக்குதலுக்கு உத்தரவிடப்பட்டது. கிளிநொச்சி நோக்கி பாரிய படையெடுப்பு ஒன்றை நடத்தும் பணியில் இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாவார்கள் என்பது அரசுக்குத் தெரிந்த ஒன்றாகவே உள்ளது. ஆனால், அதுவே அரசினால் விரும்பப்பட்ட ஒன்றாகவும் இருந்தது. ஏனெனில் விடுதலைப் புலிகள் மீது தமது வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ள முடியாது என்பதை நன்கு உணர்ந்திருந்த சிங்கள அரசு, அப்பாவிப் பொதுமக்கள் மீது வஞ்சம் தீர்க்க முனைந்தது. இதனால் மக்கள் இன்னலுறுவர் எனத் தெரிந்திருந்தும் அது தாக்குதலைத் தொடக்கியது.

இந்த் வகையில் கிளிநொச்சி நோக்கிய 'சத்ஜெய' இராணுவ நடவடிக்கையானது, இராணுவ ரீதியிலான இலக்கு எதையும் எட்டவில்லை என்பதே வெளிப்படையானது. ஆனால் தமிழ் மக்கள் மீது வஞ்சம் தீர்க்கும் அதன் குறிக்கோளில் அது கணிசமான வெற்றியை ஈட்டியுள்ளது. பல அப்பாவி மக்களைக் கொன்று, காயப்படுத்தி இலட்சக்கணக்கான மக்களை இடம் பெயர வைத்து அவர்களின் குடிமனைகள் பொருளாதார இலக்குகளை அழித்தது. அதாவது முல்லைத்தீவு இராணுவத் தோல்விக்கு அப்பாவிப் பொதுமக்கள் மீது வஞ்சம் தீர்ப்பதில் அரசு வெற்றி ஈட்டி வந்தது. ஆனால், இது அரசியல் ரீதியில் சந்திக்கும் தோல்விகளின் படிக்கட்டுகளில் ஒன்றாகும் என்பது முக்கியமாகும். ✷

www.tamilarangam.net



# எந்த விடுதலை தமிழர்களுக்கு வேண்டும்

எங்கள் மண்ணில் நாம் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டம் தன்னாட்சி உரிமையுள்ள தமிழீழத்தை மீட்டெடுப்பதற்கான போராட்டம். தமிழீழம் என்பது வெறும் நிலப்பரப்பு மட்டுமல்ல, ஆரோக்கியமான சிந்தனைகொண்ட சமூக, பொருளாதார விடுதலை பெற்ற தமிழ் மக்கள் வாழும் சமூகக் கட்டமைப்பே நாம் அமைக்க விரும்பும் தமிழீழம். அதற்காக நாம் மக்களிடையே சமூகப் பார்வையையும் புரட்சி உணர்வுகளையும் ஊக்குவிப்பதற்காகவும், சமூகச் சீர்கேடுகளைத் தவிர்ப்பதற்காகவும் பல வழிமுறைகளைக் கையாண்டோம். புலிகள் இயக்கத்தின் வெளியீடுகளான பத்திரிகைகள், நூல்கள், ஒலி – ஒளி நாடாக்கள் என்பவற்றினூடாக மக்களை முடிந்தளவுக்கு வழிநடத்தினோம். இதன் ஒரு பகுதியாகச் சில விடயங்களை நாம் கட்டுப்படுத்தியிருந்தோம். நீண்ட காலமாக ஈழமக்களின் பொழுதுபோக்கு ஊடகங்களாக இருந்துவந்த தென் இந்தியத் திரைப்படங்களும் நாம் கட்டுப்படுத்தியவற்றுள் அடங்கும்.

திரைப்படங்களுக்கு நாம் தடைவிதித்த காரணம் இதுதான்: இந்தியாவில் தயாரிக்கப்படும் பெரும்பாலான திரைப்படங்கள் மக்களின் சமூகப் பொறுப்புணர்வை, ஒழுக்கத்தை முன் எடுப்பதற்குப் பதிலாக வன்முறையையும், ஆபாசத்தையும், பண்பற்ற நெறிகளையும், பாலியல் உணர்வையும் இளைஞர்களிடம் தூண்டும் வகையிலான காட்சியமைப்புகளையும் வசனங்களையும் கொண்டவையாகவே வெளிவருகின்றன. உணவுப் பஞ்சம், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை தலைவிதித்தாடும் இந்தியாவில் மக்களுக்கு அரசின் மேல் ஏற்படக்கூடிய எதிர்ப்புணர்வை மேற்சொன்ன வகையான காட்சிகள் திசைமாற்றி விடுகின்றன. தனதும், குடும்பத்தினதும் துன்பங்களை மறப்பதற்காகத் திரைப்படம் பார்க்கச் செல்லும் இந்தியக் குடிமக்கள், இத்தகைய காட்சிகளில் ஒன்றிப் போய்த் தம்மை மறப்பதும், படத்தில் வரும் காட்சிகளால் தூண்டப்பட்டுக் குற்றச் செயல்களில் ஈடுபடுவதும் இந்திய அரசுக்கு நிம்மதியைத் தரும் விடயம். தன்மீது அதிருப்தி அடைந்துள்ள இன்றைய சமுதாயத்தின் எதிர்ப்புணர்வைச் சிதறடிக்க வேண்டிய தேவை அதற்குள்ளது.

இங்கு அப்படியல்ல. நாம் ஒரு குட்டி நாடு. எம் நாட்டை ஒரு பெரிய நாடு நசுக்கிக்கொண்டிருக்கிறது. எமது நாட்டை நெருக்கடி நிலையிலிருந்து மீட்டெடுக்க, ஆள ஆளுமையுள்ள போர்க்குணமுள்ள புரட்சிகர இளம் பரம்பரை வேண்டும். இந்நிலையில் அவர்கள் இந்தியத் திரைப்படக் காட்சிகளால் தூண்டப்பட்டு வன்முறையிலும், சமூகச் சீர்கேடுகளிலும் ஈடுபடுவது விரும்பத்தக்கது அல்ல. இளைஞர்கள் சுய உணர்வுடன் சிந்தித்து, அறிவு பூர்வமான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரத்தில், தம்மை மறந்த நிலையில் வழி தவறிப் போவதை நாம் அனுமதிக்க முடியாது. நாளை இந்த நாட்டை ஆளப்போகும் இளைஞர்களின் உள ஆரோக்கியம் சிதையக்கூடாது என்பதில் நாம் கவனமாக இருந்ததாலேயே நாம் இந்தத் தடையை விதிக்க வேண்டி நேரிட்டது.

இதனால், தமது பொழுதுபோக்கு தடைப்பட்டதாகப் பலர் மனம் நொந்திருக்கலாம். ஆனால், இத்தடை காரணமாகப் பல இளைஞர்கள் பாதுகாக்கப்பட்டனர் என்பது உண்மை. கடந்த சில ஆண்டுகளாக எவை எவை இளைய சமுதாயத்தைத் தேவையற்ற வழிகளில் திசை திருப்பிவிடக்கூடும் என்று இனம் கண்டு நாம் எவற்றையெல்லாம் தடைசெய்தோமோ, அவற்றையெல்லாம் இன்று சிறிலங்கா, அரசு யாழ்ப்பாணத்தில் "தாராளமயம்" ஆக்கியுள்ளது. யாழ்ப்பாணத்து மக்களை விடுவிக்கப்போவதாகக் கூறி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய இராணுவம் முதலில் செய்தது என்ன? புனர்நிர்மாணம், புனரமைப்பு வேலைகளோ அல்லது உணவு விநியோகமோ அல்ல. ஆபாசமான பாலுறவுக் காட்சிகளைக் கொண்ட புத்தகங்களையும், திரைப்படங்களையும் அங்குள்ள இளைஞர்களுக்கு விநியோகித்ததும் கசிப்பு உற்பத்தியை ஊக்குவித்ததுமே ஆகும். ஆக்கிரமிப்பில் ஈடுபடும் ஒரு இராணுவம், இத்தகைய கீழ்த்தரமான வேலைகளைத் தவிர வேறு எதைச் செய்யும்!

ஆனால்.......

உண்மை அதுவல்ல.

எதிரி திட்டமிட்டு எமது பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கும் வழிகளில் ஈடுபடுகின்றான் என்பதை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டும். எதிரியின் தூண்டலுக்கு நாம் தலை சாய்த்தால் நாளை நாம் தமிழர்கள் என்ற தனித்துவத்தை இழந்துவிடுவோம். எனவே எதிரி எம்மீது தொடுக்கும் பண்பாட்டுப் போருக்கு எதிராக நாம் அணிதிரள்வதன் மூலம் எம் இனத்தைக் காப்போம். ✷

நன்றி: சுதந்திரப் பறவைகள்

# விடுதலைக்குக் கொடுத்த விலை

## உண்மைச் சம்பவம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வெல்லாவெளி, முற்று முழுதாக இராணுவத்தினரின் ஆக்கிரமிப்புப் பிரதேசம். இராணுவக் கெடுபிடிகளும், அட்டகாசங்களும் இங்கு தாராளமாக நடந்துகொண்டிருந்தன.

அங்கே அவர்களுக்கு ஒன்பது பிள்ளைகள். அவர்களில் ஒருவர் தேசவிடுதலைக்காய்ப் போராடிக்கொண்டிருக்கும் எம்மவர்களுடன். தனது பிள்ளைகளுக்காக மட்டுமன்றி, அவர்களுடன் சேர்ந்த பல போராளிகளுக்காக அம்மாவின் அடுப்பு இரவு, பகலாக எரிந்துகொண்டேயிருக்கும். ஒரு வீட்டில் அளவுக்கு அதிகமான உணவுப் பொருட்கள் இருந்தாலோ, சமைத்த உணவு இருந்தாலோ அவை விடுதலைப் புலிகளுக்காகத்தான் என்று இராணுவம் ஐயுற்றுத்தாக்கும் சூழ்நிலையிலும் கூட, காட்டிலிருக்கும் போராளிகளுக்காகச் சமைத்துச் சாப்பாடுகட்டிவிட்டு, சமையற்

> வீட்டிலிருந்த துணிமணிகள், உடுபுடவைகளையெல்லாம் சூறையாடிக் கொண்டு, அரிசி, சீனி, மா போன்ற உணவுப் பொருட்களில் மலத்தியோன் கலந்துவிட்டு, இவர்கள் மூவரையும் கைகளைக்கட்டியபடி.......

பாத்திரங்களை எல்லாம் கழுவி வைத்துவிடுவார் அந்த அம்மா. காட்டிலிருக்கும் எம்மவர்களுக்கு உணவு அனுப்புவது அம்மாவின் நாளாந்தக் கடமைகளில் ஒன்று.

இரண்டு போராளிகள் வந்து தாம் சாப்பிட்டுவிட்டுச் சாப்பாட்டையும் எடுத்துச் செல்வார்கள். அன்று அப்படித்தான், அவர்கள் வந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். போரதீவிலிருந்து நெல் எடுக்க வந்த வியாபாரி ஒருவன் இவர்களைக் கண்டுவிட்டான். அவ்வளவுதான், மறுநாட் காலை அம்மாவின் வீடு இராணுவத்தினரின் சுற்றிவளைப்புக்குள்ளானது. அப்பா தோட்டத்திலும், அம்மா சமையல் அறையிலும், பிள்ளைகள் நித்திரை விட்டு எழுந்தும் எழும்பாமலும் குடும்பம் முழுவதுமே இராணுவத்தின் பிடிக்குள் அகப்பட்டு, நையப்புடைக்கப்பட்டது.

அம்மாவின் வாயைக்கட்டிவிட்டு ஒருவனும், மகளின் கண்ணைக்கட்டிவிட்டு இன்னொருவனுமாகத் மாறி மாறித் தாக்க, அப்பா முற்றத்திலுள்ள முந்திரிகை மரத்துடன் கால்கள் கட்டப்பட்டு, முகம் துணியால் மூடப்பட்டு ஒருவன் உதைக்க, இன்னொருவன் வாளி வாளியாகத் தண்ணீரைக் கொண்டுவந்து ஊற்ற, அவர் மூச்சுத்திணறுவதைக் கண்ணால் பார்த்த அம்மா வாயால் கத்த முடியாமல் மயக்கமானார். ஒருவன் பிள்ளையின் கண்ணைக் கழற்றிவிட்டு அம்மாவுக்குத் தண்ணீர் கொடுக்கச் சொல்லி விரட்ட, மகள் கொடுத்த தண்ணீரால் அம்மாவுக்கு மயக்கம் தெளிந்தது. அம்மாவுக்கு முன்னால் மகளைக் கண்மூடித்தனமாகத் தாக்கினான் அந்த அரக்கன். அம்மா மீண்டும் மயக்கமானார். மீண்டும் தண்ணீர் கொடுத்து அவரைத் தெளியவைத்தான் ஒருவன்.

இப்படி ஒருபுறம் இருக்க, மறுபுறம் வீடு தலைகீழாக்கப்பட்டது. வீட்டிலிருந்த துணிமணிகள், உடுபுடவைகள் எல்லாம் சூறையாடிக்கொண்டு, அரிசி, மா, சீனி போன்ற உணவுப் பொருட்களில் மலத்தியோன் கலந்துவிட்டு, இவர்கள் மூவரையும் கைகளைக் கட்டியபடி நடத்திக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறியது அரக்கர் கூட்டம்.

தெருவில் ஊர்வலமாக நடத்திச் செல்லப்பட்ட இவர்கள், இரவு களுவாஞ்சிக்குடியில் நான்கு பக்கமும் முட்கம்பிகளால் செய்யப்பட்ட கூட்டில் அடைக்கப்பட்டனர். மறுநாள், தாயும் மகளும் தந்தையிடமிருந்து பிரிக்கப்பட்டு, மட்டக்களப்பிலுள்ள பெண் இராணுவத்தினரிடம் அனுப்பப்பட்டு, அங்கேயும் சித்திரவதைகள் தொடர்ந்தன. அம்மாவை மேசையின் கீழ் இருத்திவிட்டு, மகளை நையப்புடைப்பதைப் பார்க்கும்படி மிரட்டினாள் ஒருத்தி. "எல். ரீ. ரீ. பாட்டுப்பாடு" என்று மகளை ஒருத்தி அடித்தாள். பாட்டுப்பாடினாலும் அடிதான், பாட்டுப்பாடாவிட்டாலும் அடிதான் கிடைத்தது. "மூன்று ஐயாக்கள் வந்து உங்களைச் சுடப்போறாங்கள்" என்ற மிரட்டல்கள் வேறு. இப்படியே இரவு வரும்வரை தாயும் மகளும் மாறி மாறித் தாக்கப்பட்டார்கள். இரவு நித்திரையில் கூட அவர்களை விடவில்லை. தரையில் படுக்கவைத்து, கட்டில் கால்களுடன் தாயை வேறாகவும் மகளை வேறாகவும் கட்டினார்கள். இப்படியே இரண்டு மாதங்கள் சித்திரவதைகள் தொடர்ந்தன. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் ஒருநாள், மூவரும் கண்களால் ஒருவரை ஒருவர் கண்டார்கள். ஒரு வார்த்தைகூட ஒருவரிடம் ஒருவர் கதைக்கவில்லை. கண்களாலேயே தமது துக்கங்களைப் பகிர்ந்துகொண்டனர். விசாரணை என்ற பெயரில் மூவரிடம் பல கேள்விகள், "மகன் எங்கே?" "சாப்பாடு குடுக்கிறது....?" "அவன் எங்கே, இவன் எங்கே" என்று கேள்விக்கணைகளால் துளைத்து எடுக்கப்பட்டனர். மூவரும் 1992.08.19 அன்று கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு அம்மாவும் பிள்ளையும் வெலிக்கடையிலும், அப்பா மகசின் சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலை, இதில் இவர்களைப் போல 24 தமிழ்ப் பெண்கள் அடைக்கப்பட்டிருந்தனர். சின்ன ஒரு அறை. அந்த அறையினுள் 6 பேர். அவர்களுக்கொரு வாளி. அந்த வாளிதான் மலசலகூடமாகப் பயன்பட்டது. காலை 6 மணிக்கு அறைக்கதவைத் திறந்து, வரிசையில் ஆட்களை

> தென் தமிழீழத்தின் கதை இரத்தத்திலும் கண்ணீரிலும் எழுதப்படுகின்றது

எண்ணி, முகம் அலம்பவிட்டு அடைத்தால், திரும்பவும் மாலை 4 மணிக்குத்தான் அறைக்கதவு திறக்கும். அதற்கிடையில் இயற்கைக் கடன் கழிப்பதானால் அறையிலுள்ள வாளியில்தான் கழிக்க வேண்டும். இயற்கைக் கடன் கழிப்பதில் உள்ள சிக்கலால் அங்கு அடைக்கப்பட்டவர்கள் ஒரு நேரம் மட்டும்தான் சாப்பிடுவதும் தண்ணீர் குடிப்பதும்.

சரியாக ஒரு வருடம் சிறை வாழ்க்கையிலிருந்து விடுதலை பெற்று 1993.08.18 அன்று அம்மாவும், 1993.09.19 அன்று மகளும், 1994. 10ஆம் மாதம் அப்பாவும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

சிறையிலிருந்து வெளியே வந்து கூட அவர்களுக்கு நிம்மதி இல்லை. அடிக்கடி இராணுவத்தின் சுற்றிவளைப்புகள்தான் தொடர்ந்தன. "எல்ரீரீ வாறது","சாப்பாடு குடுக்கிறது?" என்றும் "எல்ரீரீ யைக்காட்டு" என்று மற்றப் பிள்ளைகளுக்கு ஒரே அடியும் உதையும். இது மீண்டும் ஒரு தொடர்கதையாகிப் போய்விட்டது. 1994.04.16 அன்று இப்படித்தான் 8 இராணுவத்தினர் வந்து எல்லோரையும் பிடித்து உதைத்து, அப்பாவின் கையைக் கட்டிவிட்டு "எத்தினை பாசல் கட்டிக்குடுத்தது?" என்று கேட்டு துப்பாக்கி முனையால் ஒருவன் அழுத்த, இன்னொருவன் பின்னால் உதைத்தான். பிள்ளையைத் தென்னைமரத்தைக் கட்டிப்பிடிக்க வைத்து அடித்து நொருக்கினார்கள். மறுநாள் எல்லோரையும் முகாமுக்கு வரும்படி சொல்லிவிட்டுக் காடையர் கூட்டம் போய்விட்டது. அன்று இரவோடு இரவாகப் பிறந்து, தவண்டு, விளையாடி வளர்ந்த தம் சொந்த மண்ணைவிட்டு அந்தக் குடும்பம் வட தமிழீழம் நோக்கி இடம்பெயர்ந்தது. ✷

- உலகமங்கை

www.tamilarangam.net



## தமிழீழத்திலிருந்து

# தேசபக்தர் அமைப்பின் அறிக்கை

"சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா தான் விரும்பும் அரசியல் தீர்வை இராணுவச் சூழலில் கைதிகள் போல் வாழும் தமிழர்கள் மீது திணிப்பதற்கே முயல்கின்றார்"

ஏப்பிரல் மாதம் 20-ஆம் திகதிக்கு முன்பு நாங்கள் 'ரிவிரச'வினால் அகதிகளாக இருந்தோம். வீடின்றி, நிவாரணம் இன்றி சிதறிடிக்கப்பட்டு கூடு கலைந்த குருவிகளைப் போல் இருந்தது எங்களின் வாழ்க்கை. ஆனால், 20-ஆம் திகதி நடுப்பகல் எல்லாமே தலைகீழாக மாறியது. ஒரு பகற்பொழுதிற்குள் நாங்கள் இத்தீவில் அதிகம் சலுகை பெற்ற மக்களாக காட்டப்படலானோம். தொடர்புச் சாதனங்களின் புதினப் பொருள் ஆகினோம். கடந்த சுமார் கால்நூற்றாண்டு காலமாக எங்களைக் கொன்றும், அவமானப்படுத்தியும், எங்கள் கிராமங்களைச் சுட்டெரித்தும், சொத்துக்களை நாசமாக்கியும் கொடுமைகள் பல செய்த அதே இராணுவம், இப்பொழுது திடீரென சாதுவானதாக மாறி மிகவும் விருப்பத்துக்குரிய விருந்தாளிகள் போல எங்களை வரவேற்கலானது. எப்படி, இப்படியொரு தலைகீழ் மாற்றம் நிகழ்ந்தது? எங்களுடைய இரவுகளின் மீது குருட்டுத்தனமாக 'செல்'களை ஏவியவர்கள் இப்பொழுது எங்களது இரவுகளுக்கு ஒளியேற்ற மின்சாரம் தருபவர்களாக மாறியது எப்படி? எங்களுடைய தலை வாசல்களை இறுகமூடி எங்களை முற்றுகையிட்டு பட்டினி போட்ட அதே பகைவர்களே, இப்போது எங்களைத் தேடி வந்து நிவாரணச் செய்கையினால் மீட்பவர்கள் போலாகியது எப்படி?

ஏன், ஏதாவது அதிசயம் போன்ற அற்புதம் ஒன்று நிகழ்ந்துவிட்டதா? யாராவது மந்திரவாதி தனது மந்திரக்கோலை அசைக்க இப்படிப் பல மாற்றங்கள் நடக்கத் தொடங்கினவா? இல்லை. அப்படி எதுவும் இல்லை. இங்கு நடந்து கொண்டு இருப்பவை எல்லாம் மிகக் கூரான சூனியக்கார அரசு ஒன்றின் ஏமாற்ற வேலைகளே. இவை யெல்லாம் அற்ப சலுகை களுக்கும் நிவாரணப் பிச்சைகளுக்குமாகக் கையேந்தும் கோழைகளாக எங்களை அவர்கள் நினைக்கின்றார்கள். கடந்த கால்நூற்றாண்டு காலமாக நாங்கள் போராடிய தெல்லாம், இப்படி உங்கள் சலுகைகள்- நிவாரணங்களுக்காகத்தான் என்று வெளி உலகிற்கு எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் இப்போது அவர்களுக்கு வாய்த்திருக்கின்றது. எனவே தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை, அற்ப சலுகைக்கானது என சிறுமைப்படுத்த அவர்கள் முனைகிறார்கள். கடந்த கால்நூற்றாண்டு கால எங்களின் கசப்பான, மிகக் கொடுமையான அனுபவங்களை நாங்கள் திடீரென மறந்துவிடுவோம் என்று அவர்களை உடனடியாக நம்பி விடுவோம் என்றும் அவர்கள் நினைக்கிறார்கள். ஓர் புதிய மாயச் சொகுசுக்குள் எங்களை சிக்க வைப்பதன் மூலம் எங்களுடைய ஆறாத காயங்களின் வேதனைகளில் இருந்து திசைதிருப்பி விடலாமென அவர்கள் கற்பனை செய்கிறார்கள்.

எங்களுடைய பிள்ளைகளின் பெயர்களை அவர்களின் வீதிகளின் முகத்தில் இருந்து எடுத்தெறிந்து விட்டார்கள். எங்கள் மதில்கள் சுவர்களில் இருந்து அவர்கள் துடைத்தெடுத்து விட்டார்கள். எங்கள் பிள்ளைகளின் நினைவுச் சின்னங்களை அவர்கள் உடைத்து நொறுக்கிவிட்டார்கள். எங்கள் பிள்ளைகள் துயிலும் இல்லத்தை அவர்கள் கவசவண்டியினால் உழுது மூடிவிட்டார்கள். எங்கள் பிள்ளைகளின் கல்லறைக ளைக்கூட விட்டு வைக்காத ஒரு கொடுங்கோல் ஆட்சி இப்போது எங்கள் தேவைகளை தீர்க்கப் போவதாகவும், வீடுகளைச் செப்பனிடப் போவதாகவும் கூறுகின்றது. ஆனால் தனது சொந்த சிங்கள மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளையே இது வரையிலும் நிறைவேற்றாமல் ஏமாற்றுகின்ற அரசு, மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் கூட தமிழர் உண்டு. ஆனால், யாழ்ப்பாணத்தவர்களோடு நேரடியாகப் பேசப் போகிறதாக சந்திரிகா கூறுகிறார். நேரடியாகப் பேசுவது என்றால் எப்படி? சந்தி, தெருக்களில், திண்ணை களில் வைத்து தமிழர்களோடு கதைப்பதா? இப்படியொரு பேச்சு வார்த்தை, இப்படி ஒரு சமாதானம் உலகில் இது வரை வேறெங்கும் நடந்ததேயில்லை. இவ்வளவு காலமும் புலிகளிடம் பேச முடியாது கொழும்பில் உள்ள தமிழ் அரசியல்வாதிகளோடு தான் பேசுவது என்று சந்திரிகா கூறிவந்தார். இப்போது அதுவும் இல்லை. யாழ்ப்பாணத் தலைவர்களோடு நேரடியாகப் பேசுகிறேன் என்கின்றார். அப்படியா? அதாவது, அவர் யாரோடு பேசாமல் விடப் போகிறார்? தமிழர்களை எல்லா மட்டங்களிலும் ஏமாற்றப் போகிறார். தமிழர்களை, அவர் ஏமாளி என்றும் அவர்கள் மறதி அதிகம் உடையவர்கள் என்றும் நினைக்கிறார். இன்று இராணுவச் சூழலுக்குள் கைதிகளைப் போல் இருக்கும் எங்கள் மீதில் விரும்பிய ஒரு தீர்வினை திணித்துவிட விரும்புகின்றார். இதுதான் அவருடைய சமாதானம். யுத்தத்தின் மூலம் சமாதானம். அதாவது, யுத்தத்தால் தோற்கடிக்கப்பட்ட, அல்லது கைதிகளாக்கப்பட்ட அல்லது சரணடைந்த தமிழர் மீது தான் விரும்பிய தீர்வைத் திணித்து அற்ப சலுகைகளுக்கும் நிவாரணப் பிச்சைகளுக்கும் தான் போராடினோம் என்று வெளியுலகிற்கு காட்டுவது, அத்தகைய சலுகைகள் - நிவாரணங்கள் மூலம் எங்களை திசை திருப்புவது, ஏமாற்றுவது. இதுதான் யுத்தத்தின் மூலம் சமாதானம் எனப்படுவது. ஆம். மறுபடியும் ஒருமுறை நாம் வஞ்சிக்கப்படப் போகிறோமா? கடந்த கால்நூற்றாண்டு காலப் போராட்டத்தில் கசப்பான உண்மையான ஞாபகங்களை அப்படியே மறந்து விடப் போகிறோமா?

எங்களுக்காக தங்களை மிக இளம் வயதில் தியாகித்த எங்கள் பிள்ளைகளின் புனிதமான நினைவுகளில் நாளைக்கு புழுதிவழிய விடப்போறோமா? இல்லை. தமிழர்களின் பிரச்சினை உதிரிகளின் பிரச்சினை இல்லை. தமிழர்களை உதிரிகளாக்கி கொட்டிக் குலைத்துவிட்டு நிவாரணத்திலும், சலுகைகளினாலும் சமாதானப்படுத்திவிடலாமென சந்திரிகா கற்பனை செய்கின்றார். ஆனால் தமிழர்கள் உதிரிகள் அல்ல. ஒரு திரளான தேசிய இனத்தின் திரட்டப்பட்ட - விலை கூறப்பட முடியாத கூட்டு உரிமைகளுக்காக தமிழர்கள் போராடிக்கொண்டு இருக்கின்றார்கள். அற்ப சலுகைகள் - நிவாரணங்கள் போன்றவற்றுக்காக அல்ல. படையெடுப்பினால் தமிழ் தேசிய இனத்தை அற்றுப் போகச் செய்து கைதிகளாக்கி, உதிரிகளாக்கி சிங்கள மயப்படுத்தப்படுவதே சந்திரிகாவின் "போர் மூலம் சமாதானம்" என்பது. இது ஜெயவர்த்தனாவின் "போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்" என்ற போர்ப் பிரகடனத்தில் இருந்து எந்த விதத்திலும் வேறானது அல்ல. ✷

## தமிழருக்கென ஒரு தனியான தேசம் தமிழர் மனங்களில் உருவாகிவிட்டது!

**-பிரபல அரசியல் விமர்சகர் விஜேமானே**

"தமிழர்களது இதயங்களிலும் மனங்களிலும் அவர்களுக்கென தனியானதொரு தேசம் உருவாகிவிட்டது என்ற உணர்வு ஏலவே ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் தொடரும் போரினால் ஒவ்வொரு தினமும் கிடைக்கும் வெற்றியானது அவர்களது இறுதி இலக்கான சுதந்திரத்தை ஈட்டுவதற்குப் பங்களிப்புச் செய்யும்" இவ்வாறு பிரபல அரசியல் விமர்சகரான அட்ரியன் விஜேமானே தெரிவித்துள்ளார்.

"ஹொட் ஸ்பிரிங்" இதழில் தமிழரது சுதந்திரத்திற்கான போர் என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா நிர்வாக சேவையில் மூத்த அதிகாரியாகக் கடமையாற்றிய பின்னர் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வரும் அட்ரியன் விஜேமானே தனது கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில்,

"ஆயிரக்கணக்கான மனித உயிர்களை இழந்ததோடு மட்டுமல்லாது இலட்சக்கணக்கான அகதிகளை உருவாக்கியதோடு – தமிழரது சொத்தில் பெரும் பகுதியை அழித்துள்ள இந்தப் போரானது, தமிழரது விடுதலையை நோக்காகக் கொண்டு நாளாந்தம் வளர்ந்து வருகிறது.

1977 ஆம் ஆண்டிலேயே, தாம் தனியாகப் பிரிந்து போவதென்ற நிலைப்பாட்டை தமிழர்கள் தேர்தலொன்றில் வெளிப்படுத்தினர். ஆனால், தமிழரது இந்த நிலைப்பாடு சிறிலங்காவினால் இராணுவத்தின் மூலம் சிதறடிக்கப்பட முயற்சி எடுக்கப்பட்டது. ஒரு இனத்தின் பெரும்பான்மை விருப்பமானது, பெரிய இனத்தின் விருப்பு வெறுப்புக்கேற்ப ஏற்றுக்கொள்ளப்படாமல் மறுக்கப்பட்டது. இந்த வகையில் ஜனநாயகத்திற்கு முரணான செயற்பாடுகளே போரையும் உருவாக்கின.

தம்மைப் பாதுகாக்கவும், தமது தாய்நிலத்தில் வாழவும் – தமக்கென ஒரு தேசம் தேவை என்பதே தமிழர்களது அடிப்படை நிலைப்பாடாக இருக்கிறது.

யாழ்ப்பாணத்தை வெற்றிகொண்டு விட்டதுடன் போர் முடிவிற்கு வந்துவிட்டதாகவே சிங்களவர்களிலும், அவர்களது தலைவர்களிலும் பெரும்பாலானோர் நம்புகின்றனர். ஆனால், இந்திய அமைதி காக்கும் படைக்கு ஏற்பட்ட அனுபவத்தை – அதுவும் மிகவும் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட வரலாற்று அனுபவத்தை இவர்கள் மறந்துவிட்டார்கள் போலவே தோன்றுகிறது.

போரைத் தொடர்ந்தும் இதே போக்கிற் கொண்டு நடத்துவதாக இருந்தால் அது சிறிலங்காவுக்கு மேலும் பல பிரச்சினைகளை ஏற்படுத்திவிடும். வரையறைப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டினுள் புதிய புதிய ஆயுத தளபாடங்களைத் தொடர்ச்சியாகக் கொள்வனவு செய்வதென்பது சிறிலங்காவுக்கு ஏற்புடையதாக இருக்கப் போவதில்லை. அவ்விதம் கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு 'அன்ரனோவ்' விமானங்கள் கூட மிக விரைவிலேயே கடலில் வீழ்ந்து அமிழ்ந்து போனதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வளவு காலத்திற்கு இவ்விதம் நாட்டின் அனைத்து வளங்களையும் கொட்டி, ஆயுத தளபாடங்களைப் பெற்றுப் போரினை நடத்த முடியும்? இது நீண்ட காலத்திற்கு ஒருபோதுமே ஏற்புடையதாயிருக்கப் போவதில்லை.

மற்றைய போர்களோடு ஒப்பிடும் போது சுதந்திரப் போராட்டங்கள் என்றாவது ஒருநாள் – தமது சுதந்திரத்திற்காகப் போராடும் இனத்திற்கு நாடொன்றைப் பெற்றுக்கொள்வதுடனேயே முடிவடைகின்றன.

இவ்வாறு அட்ரியன் விஜேமானே தனது கட்டுரையில் மேலும் குறிப்பிட்டுள்ளார். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தென் தமிழீழப் விடுதலைப்போரில்

**வடக்கில் பெரும் இராணுவ வெற்றியைப் பெற்றுவிட்டதாக இறுமாந்திருக்கும் சிங்கள அரசுக்குப் பெரும் இராணுவ அரசியற் தோல்வியைக் கொடுக்கும் வகையில், கிழக்குக் களத்தை நெறிப்படுத்துகின்றார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.**

**யா**ழ்ப்பாணக் குடாநாட்டை மீளக்கைப்பற்றி, அங்கு தமது அரசின் நிர்வாக ஆளுகையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்ற மைய நோக்கத்தை (Objective) அடைவதற்காக, ஜெனரல் அனுருத்த அவர்கள், ஆபத்தான ஒரு மூலோபாயத்தை (Strategy) கையாண்டார். ஏற்கெனவே அவரது படைகளின் கைகளிலிருந்த கிழக்கில் பெருமளவு துருப்புக்கள் நிலைகொண்டிருந்த நிலையில், அவர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் புறப்பட்டபோது, படை பலப் பற்றாக்குறை என்ற பெரும்பிரச்சினையை எதிர்கொண்டார். அந்தப்பிரச்சனையை வெற்றி கொண்டு, சூரியப் பிரகாசம் படையெடுப்புக்களை அரங்கேற்ற அவர் கையாண்ட அந்த மூலோபாயம் என்னவெனில் –

கிழக்கின் குறிப்பிட்ட ஒரு பகுதியிலிருந்து – மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து – தனது படைகளை முற்றாக விலக்கி, வடக்குப் படையெடுப்பிற்கு நகர்த்துவது என்பதுதான்.



மட்டக்களப்புக் களமுனையில் தளபதி கருணா: 05.12.1995 இல், புதுக்குடியிருப்பு இராணுவ முகாம் தாக்குதலில் களப்பலியான கரும்புலி மேஜர் ரங்கனுடன்.

ரத்வத்தை அவர்கள் நடைமுறைப்படுத்திய இந்த மூலோபாயம், சிங்கள தேசத்திற்கு நன்மை பயக்கப் போகின்றதா அல்லது தீமைபயக்கப்போகின்றதா என்பதை – அது தரும் விளைவுகளைக்கொண்டு – எதிர்காலம் தீர்மானிக்கும். எனினும், இந்த மூலோபாயத்தின் பெறுபேறு எப்படியானதாக இருக்கப்போகின்றது என்பதை நாம் கணிப்பீடு செய்யமுடியும்.

3 ஆம் கட்டப் போரின் தொடக்கத்திலிருந்தே மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தமது இராணுவ நடவடிக்கைகளைப் புலிகள் தீவிரப்படுத்தினர். 2ஆம் கட்டப்போர்க்காலத்திலும், அதன் தொடர்ச்சியான சந்திரிக்கா அரசாங்கம் – புலிகள் சமரசப் பேச்சுக் காலத்திலும், விட்டுக்கொடுக்காத இரும்புப்பிடிக்குள் தாம் வைத்திருந்த கிழக்குப்பிராந்தியத்தில் புலிகள் வல்லமை மிக்க தாக்குதல்களைத் திடீரென நடாத்தத்தொடங்கியமை, சிங்களப் படைத்துறை உயர் வட்டாரத்தில் திகைப்பினை ஏற்படுத்தியது. முகாம்களுக்கிடையிலான ரோந்துகளும், விநியோகங்களும் அதிரடிகளுக்கு இலக்காகியதுடன் , முகாம்களும் தாக்குதலுக்கு உட்பட்டன. கிழக்குப் போர் அரங்கின் முக்கிய நிகழ்வுகளாக ,உயர்பயிற்சிபெற்ற சிறப்புப் படையினரைக் கொண்டு உச்சக்கட்டப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த கட்டுமுறிவு மற்றும் தரவைக்குளம் முகாம்கள் மீதான பெரும் தாக்குதல்கள் திகழ்கின்றன. முதுநிலைத் தளபதி கருணாவின் வழிநடத்தலின்கீழ்ப் புலிகள் கொடுத்த இவ்விதமான இடையறாத அழுத்தத்தின் காரணமாக, தக்கவைத்துக் கொள்ள முடியாது எனக் கருதிய பல முகாம்களை அகற்றிவிடவேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப் படைக்கு எழுந்தது. அதே சமநேரத்திலேயே, குடாநாட்டுச் சமர்களுக்காகக் கிழக்கிலிருந்து படைகளை நகர்த்தவேண்டிய தேவையும் வந்தது. ஜெனரல் அனுருத்த அவர்கள் படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து படைகளை வெளியேற்றி – குடாநாட்டுக்கும் அனுப்பினார். எழுவான்கரைப் பகுதியையும் பலப்படுத்தினார்.

மாவட்டத்தின் உட்புறப் பகுதிகளிலிருந்து படைகள் பின் வாங்கிக் கொண்டிருக்கும்போதே, இடைவிடாத–தொடர்ச்சியான – அதிரடிகளை நிகழ்த்தியவண்ணம் முன்னேறிய புலிகள், எதிரியின் வெளியேற்றத்தைத் துரிதப்படுத்தி, இப்போது அவனை எழுவான்கரைப் பிரதேசத்திற்குள் முடக்கியுள்ளனர். பெரும் நிலப்பரப்பிலிருந்து படைகள் வெளியேற்றப்பட்டமையானது, புலிகள் அப்பகுதியில் இலகுவாகப் பலம் பெறவும், கிழக்கில் போரை விஸ்தரிப்பதற்கான ஒரு பின்தளத்தை வைத்திருக்கவும், அரசியல் செயற்பாடுகளை அதிகரிக்கவும் கூடிய சாதகத் தன்மைகளைப் புலிகளுக்குக் கொடுத்துவிட்டது.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சரிநிகர்' என்ற இருவார இதழ், கிழக்குக் களநிலையை விபரிப்பதைப் பின்வருமாறு ஆரம்பிக்கின்றது –

"மட்டக்களப்பின் அரச நிர்வாகத்தை இல்லாதொழிக்கப் புலிகள் மெல்ல மெல்ல நகரை நோக்கி நகர்ந்து வருகின்றார்கள் என்றால், அதில் எந்த வியப்புமில்லை. மட்டுநகரிலிருந்து நாலைந்து மைல்களுக்கு அப்பால் அரசதிணைக்கள வாகனங்கள் செல்வதைக் காணக்கூட முடியவில்லை.

படுவான்கரைப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் அல்லது ஏதோ ஒருவகையான நிர்வாக முறைமைக்குள் இருப்பது அனைவரும் அறிந்த ஒரு விடயமே. நகரிலிருந்து சில மைல்கள் தள்ளி வாழைச்சேனை, கல்முனை பிரதான வீதிகளில் புலிகள் சுதந்திரமாகவே உலாவுகின்றார்கள்."

மாவட்டத்தின் 80 வீதமான நிலப்பரப்பைக் கொண்ட படுவான்கரைப் பிரதேசத்தில் இப்போது, சிங்களப் படை தனது கட்டுப்பாட்டை இழந்து நிற்கின்றது. அது தனது கட்டுப்பாட்டைப் பேணிவரும் எஞ்சிய 20 வீத நிலப்பகுதியான –மட்டக்களப்பு நகரை உள்ளிட்ட– எழுவான்கரைப் பிரதேசம், புலிகளின் உச்சக் கட்ட நெருக்கடியைச் சந்தித்த வண்ணம், ஏறக்குறைய முற்றுகையிடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

பிரபல இராணுவ ஆய்வாளர் தாரகி, சண்டே 'ரைம்ஸ்'க்கு எழுதுகையில் ,மட்டக்களப்பின் 'இராணுவச் சமநிலை' யைப் பின்வருமாறு கணிப்பிடுகின்றார்.

"வெலிக்கந்த – மட்டக்களப்பு வீதி, கல்முனை–மட்டக்களப்பு வீதி , மண்டூர் வெல்லாவெளி –அம்பாறை பக்கியெல்ல வீதி என்ற மூன்று பிரதான பாதைகளும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த வீதிகள் மீது புலிகள் ஓயாது அழுத்தத்தினைக் கொடுத்து வருகின்றனர். தரைப்படையினராலோ அதனைத் தடுத்து நிறுத்த முடியாதுள்ளது.

இந்த மூன்று முக்கிய விநியோகப் பாதைகளையும் விரும்பிய நேரத்தில் சீர்குலையச்செய்யும் ஆற்றலைப் புலிகள் கொண்டுள்ளனர். அரசாங்கம் தனது கவனத்தை நீண்ட காலத்திற்கு வடபகுதியில் செலுத்துமாயின், புலிகளால் இராணுவத்தின் நடவடிக்கைகளை மட்டக்களப்பில் இறுதியாக முறியடிக்க முடியும். அத்தகைய நிலையை அவர்கள் பெறுவர்.

ஏற்கனவே, மட்டக்களப்பு மாவட்டத்தின் உட்புறத்தே அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சகல பகுதிகளையும் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன்–

வாகரைப் பகுதியுடன் நிலத்தொடர்புள்ள திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதி உட்புறத்தையும், அங்கிருந்து கற்குடா வரையான நீண்ட கரையோரப் பகுதியையும் விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்துகின்றனர்."

மட்டக்களப்பு வாவி , அந்த மாவட்டத்தின் புவியியல் அமைப்பை இரண்டு துண்டுகளாக்குகின்றது. ஒருபகுதி, சூரியன் எழுகின்ற திசையில் உள்ளதால் எழுவான்கரை எனவும், மறுபகுதி சூரியன் மறைகின்ற (படுகின்ற) திசையில் உள்ளதால் படுவான்கரை எனவும் பெயர்பெற்றுள்ளன. ஒருபுறம் பெருங்கடலையும், மறுபுறம் மட்டக்களப்பு வாவியையும் கொண்ட எழுவான் கரைப்பிரதேசம், நீண்டு ஒடுங்கிய ஒரு தீவு போன்றே உள்ளது. செங்கலடிப் பகுதியிலுள்ள ஒரு சிறு நிலப்பகுதியைத் தவிர இயற்கையான தரைத்தொடர்புகள் எதுவும் எழுவான்கரைப் பகுதிக்கு இல்லை. இத்தகைய



திருமலைக் களமுனையில் தளபதி சொர்ணம்: பெப்ரவரித் திங்களில் நடாத்தப்பட்ட, புல்மோட்டை 10 ஆம் கட்டை முகாம் தாக்குதலுக்குத் தயார்படும் போராளிகளுடன்.

இதன் தரைத்தன்மை காரணமாகப் பெரும் ஊடுருவற் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தடையாகக்

# போரரங்கு

கடுமையான சிக்கல்கள் – பாதகத்தன்மைகள் – உள்ளபோதும், காத்திரமான – தாக்கமுள்ள – பல அதிரடி நடவடிக்கைகளைப் புலிகள் அப்பகுதியில் தொடர்ச்சியாக நடாத்திவருகின்றனர். கடைசியாகக் முதுநிலைத் தளபதி சொர்ணம் அவர்கள் நடவடிக்கைகளை வழிநடாத்த, சிங்கள அரசின் மூலோபாயத்தைத் தோல்வியுறச் செய்யும் தந்திரோபாயங்களைப் புலிகள், அங்கும் பிரயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். வீதி உலா மற்றும் விநியோக அணிகளினதும், திருக்கோணமலையின் நூறுவீதப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகப் பரவலாக அமைக்கப்பட்டுள்ள சிறிய படைமுகாம்களினதும் நிலை, உத்தரவாத மற்றதாய் மாறத்தொடங்கிவிட்டது. குடாநாட்டுப் படைகளுக்கான வழங்கற் பாதையின் வாயில் என்ற பாத்திரத்தை வகிப்பதால், தமிழீழப் போரில் திருக்கோணமலை, இராணுவ ரீதியான கேந்திர முக்கியத்துவத்தையும் இன்று பெற்று விளங்குகின்றது. இங்கு களநிலை சிங்களப் படைக்குப் பாதகமானதாய் மாறும்போது, ஏற்கனவே சிக்கல்களைக் கொண்டுள்ள வடகிற்கான விநியோகப்பாதை, மேலும் அபாயகரமானதாய் மாறலாம்.

## போராட்டத்தை முறியடிக்க அனுருத்த கையாண்ட மூலோபாயத்தின் முடிவு என்னவாக இருக்கப்போகிறது ?

கடந்த மார்ச் மாதம் 23 ஆம் நாள், பெரிய விநியோக அணி ஒன்று அதிரடிக்கு இலக்காகி, உடனடியாக 41 படையினரும் காயமடைந்தவர்களில் 15 பேருமாக 56 படையினர் கொல்லப்பட்டனர்.

மாவட்டத்தின் நிர்வாகபீடமாக விளங்கும் மட்டக்களப்பு நகரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதால், அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்வதற்காக எழுவான்கரைப் பிரதேசம்மீது புலிகள் கொடுக்கும் – நேரடியான அதிரடித்தாக்குதல்கள் அல்லாத – மறைமுகமான நெருக்கடிகளுக்கும், அங்கு நிலைகொண்டுள்ள படைகள் வெகு சிரமத்தோடு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. அசையும் – அசையாத தமது படைநிலைகளின் பாதுகாப்பையே உறுதிப்படுத்த முடியாமல் திண்டாடும் வேளையில், அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு அங்கு சீர்குலைந்துபோகாமல் காத்துநிற்கவேண்டிய பெரும் பாரத்தையும் அவர்கள் சுமக்கவேண்டியுள்ளது. உண்மையிலேயே, மட்டக்களப்பிலுள்ள பொருளாதார மற்றும் நிர்வாக இலக்குகளைக் குறிவைக்கும் புலிகளின் – இரகசிய

அம்பாறை மாவட்டத்தில் புவியியல், குடியியல் தன்மைகள் பாதகமானதாய் உள்ளபோதும் கூட, இன்று, கணிசமான செயற்பாட்டுத் திறனை அங்கும் புலிகள் கொண்டுள்ளனர். ஆங்காங்கு கொடுக்கின்ற அதிரடிகள் மூலம் மெது மெதுவாக முன்னேற்றம் காணும் புலிகள் எதிர்காலத்தில் படையினருக்கு வாய்ப்பற்ற ஒரு களச்சூழலை அம்பாறையிலும் உருவாக்கிவிடும் சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன.

இவ்விதமாக விரிவாக்கம் பெற்றுவரும் கிழக்குப் போரரங்கு இப்போது, சிங்கள தேசத்தின் எல்லைகளையும்



அம்பாறை மாவட்டச் சண்டையொன்றில் காயப்பட்ட தோழன் ஒருவனுக்கு, களத்தில் உடனடிச் சிகிச்சையளிக்கும் புலிகள்.

சாத்தியமானதுதான். குடாநாட்டையே பிடித்துவிட்ட அவரது படையிடமிருக்கும் ஆள், ஆயுத பலத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பைப் பிடிப்பதும், கிழக்கை மீட்பதும் ஒரு பெரிய காரியமே இல்லைத்தான். ஆனால், நிலைமையைச் சரியாகக் கணிப்பீடு செய்யின், அதன் பெறுபேறாக ஒரு விடையம் தெளிவாகும். அது கிழக்கை மீண்டும் கைப்பற்ற வேண்டுமானால்,

## "மட்டக்களப்பின் அரசு நிர்வாகத்தை ஒழிக்க புலிகள் மெல்ல மெல்ல நகர்ந்து நகரை நோக்கி வருகின்றனர்."

ஜெனரல் அனுருத்த அவர்கள் வடக்கைக் கைவிட வேண்டும் என்பதாகும். அதாவது, அவரிடமிருக்கும் படைபலம், ஒரே நேரத்தில் தமிழீழப் பகுதிகள் அனைத்தையும் கட்டுப்படுத்தப் போதுமானதல்ல.

எனவே, நடைபெறப்போவது இதுதான்! விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நோக்கிய பரிணமிப்பு நகர்ச்சியாய், அந்த அற்புதம் பின்வருமாறு நிகழத்தான் வாய்ப்புக்கள் உண்டு.

போராட்டச் சக்கரத்தின் அச்சுமையமாக விளங்கும் வடபிராந்தியத்தை விழுத்தும்போது ஒட்டுமொத்தமான போராட்டமே முறியடிக்கப்பட, கிழக்கும் தானாகவே விழுந்துவிடும் என்ற எதிர்பார்ப்புடனேயே, கிழக்கிலிருந்து


## புதியதொரு திருப்புமுனை

மற்றும் பகிரங்க – நடவடிக்கைகளை முறியடிக்க முடியாமலேயே, சிங்களப்படையினர் அங்கு உள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கனிந்துவரும் இவ்வாறான முன்னேற்றகரமான களநிலைமை மெல்ல மெல்ல விரிவடைய, கிழக்கு மாகாணத்தின் இராணுவச் சமநிலையில் பெரிய மாற்றங்கள் நிகழத்தொடங்கியுள்ளன.

திருக்கோணமலை மாவட்டத்தில் – முன்னெ


"மட்டக்களப்பில் படையினரின் நடவடிக்கைகளை இறுதியில் புலிகளால் முறியடிக்க முடியும்"




ப்போதுமில்லாத வகையில் – விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இப்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. அரிக்கத் தொடங்கிவிட்டது. தாக்குதல் இலக்குகளைத் தேர்ந்தெடுக்கும் போர்வலய வரம்பு பொலநறுவ, அநுராதபுரம், பதுளை மாவட்டங்களுக்கு விரிந்துவிட்டது. இதன் விளைவாக – தமிழினத்தின் தேசியத் தன்மையைச் சிதைக்கும் நில அபகரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி – கிழக்கு மாகாணத்திலும், அதன் எலலைப் புறங்களிலும் நிறுவப்பட்டு வரும் சிங்களக் குடியேற்றங்களுக்கு வழங்கப்படுகின்ற பாதுகாப்பு உத்தரவாதம் சிதறடிக்கப்படுகின்றது. பாதுகாப்பற்ற சூழ்நிலை தம்மைச் சூழ்வதாகக் குடியேற்றவாசிகள் கருதி, குடியேற்றப்பகுதிகளை விட்டு அவர்கள் வெளியேறத் தொடங்குவார்களானால், மாபெரும் அரசியற் தோல்வியைச் சிங்கள தேசத்திற்குப் பெற்றுத் தந்தவர்கள் என்ற வரலாற்றுப் பழி, சந்திரிக்கா–ரத்வத்த அரசாங்கம் மீது சுமத்தப்படும்.

ஆனால் ஜெனரல் ரத்வத்த அவர்கள் இதனை மறுக்கின்றார். இழந்துவிட்ட மட்டக்களப்பின் பகுதிகளைக் குறுகியதொரு காலஎல்லைக்குள், வரையறுக்கப்பட்ட நடவடிக்கை ஒன்றின் மூலமாகவே மீளவும் கைப்பற்றிவிடுவதுடன், மாறிவரும் கிழக்கின் இராணுவச்சமநிலையைத் தமக்கு முற்றிலும் சாதகமானதாகத் திரும்பவும் கொண்டுவரத் தம் படைகளால் இயலும் என, அவர் உறுதி கூறுகின்றார். அது வெறும் வாய் வீரம் அல்ல. நடைமுறைக்குச்

மட்டக்களப்பு மாவட்டத்தில் கனிந்துவரும் போராட்டத்தின் முன்னேற்றகரமான களநிலைமை மெல்ல மெல்ல விரிவடைய, கிழக்கு மாகாணத்தின் இராணுவச் சமநிலையில் பெரிய மாற்றங்கள் நிகழ்கின்றன.




வடக்கிற்குப் படைகளை

தொடர்ச்சி 12ம் பக்கம்...

www.tamilarangam.net



# பண்டா குடும்பம் போல் உண்டா உலகில்?

அண்மையில் கொழும்பில் சிறீமாவோ ரத்வத்த பண்டாரநாயக்காவின் நீண்ட அரசியல் வாழ்வினைப் பெருமைப்படுத்தும் முகமாக, சிறிய விவரணத் திரைப்படமொன்று வெளியிட்டு வைக்கப்பட்டது. அம்மையாரினதும் அவரது பிள்ளைகளினதும் கூற்றுக்களாக – மலரும் நினைவுகளாக – அமையும் இத்திரைப்படம், பல உணர்வலைகளைக் கிளப்புகின்றது. "தென்னாசியாவிலே பண்டா குடும்பம் போல் உண்டா" எனப் பெருமையடித்துக்கொள்கிறது, ரத்வத்த குடும்பத்துச் செய்தி ஏடான ஐலண்ட், இந்தியாவின் நேருக்கள், பாக்கிஸ்தானின் பூட்டோக்கள், பங்களாதேசத்தின் ரகுமான்கள் – இவர்கள் எல்லோருக்கும் இல்லாத பெருமையாக, ஒரே குடும்பத்திலே இரண்டு பிரதமர், ஒரு சனாதிபதி, உயர் அரசியல் பதவிக்கு தயாராகும் இன்னொருவர் என்பனவே, இப்பெருமைக்குக் காரணங்களாக கற்பிக்கப்படுகின்றன. அதேவேளை, அரசியல் **எமது குடும்பத்தொழில்; அதில் ஈடுபட்டதால் நாம் ஒட்டாண்டியானதுதான் மிச்சம்; அதில் வாரிக் கொட்டியதே அதிகம்; பதிலாக, பெற்றதோ மிகக் குறைவு** எனவும் திரைப்படத்தில் கூறப்படுகிறதாம். இவையெல்லாம் உண்மை தானா என நாம் அறியப்புகுந்த வேளை, **தந்தை, தாய்; மகள் என விரியும் பண்டா குடும்ப ஆட்சியிலே உள்ள - விசித்திரமான ஆனால் ஆபத்தான- ஒற்றுமைகள் சில வெளிப்பட்டன.** தொடக்கமும் இடையும் முடிவும் ஒன்றாகும் ஒற்றுமைத் தன்மைகள் இவை!

தொடக்கம் எவ்வாறிருந்தது? வைகாசி 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் பண்டாவும், வைகாசி 1970 இல் சிறீமாவோவும், அண்மையில் சந்திரிகா அம்மையாரும் குறிப்பிடத்தக்க வெற்றிகளை அடைந்தமைக்கு, அவ்வக் காலகட்டங்கட்கு **முன் பதவியிலிருந்த ஐ.தே.கட்சியினரின், மிக மோசமான மக்கள் விரோத செயற்பாடுகளே காரணமாகின.** 1952 ஆம் ஆண்டு வைகாசியில் நடைபெற்ற தேர்தலில் வெற்றிபெற்ற டட்லியும், தொடக்கத்தில் அவரது நிதிமந்திரியாய் இருந்த **ஜே.ஆரும்,** 1953 ஆவணியில், அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு அரசு வழங்கிய மானியத்தை வெட்ட – ஒரு கொத்து அரிசியை 25 சதத்திலிருந்து 70 சதமாக்க, சீனி விலையை இரட்டிப்பாக்க, பாடசாலை மதிய உணவை வெட்ட, போக்குவரத்து, தபாற் கட்டணங்களை இரட்டிப்பாக்க– 1953 ஆம் ஆண்டு ஆவணியில் பெரும் வேலை நிறுத்தம் வெடித்தது. எனவே, நிலைமைகளைச் சரியாகக் கணக்கிட்டு ஏற்கெனவே தனிக்கட்சி ஆரம்பித்த பண்டா என்ன செய்தார்? சிங்களப் பொதுமகன் யுகத்தை, சிங்களத்தின் சிறப்பை, பௌத்தத்தின் மேன்மையை உச்சியில் வைத்துக் கொண்டாடப்போவதாகக் கூக்குரலிட்டார். 24 மணித்தியாலத்திற்குள் சிங்களம் ஆட்சி மொழியாகும் என்ற பண்டா, இன்னொரு உத்தியையும் பின்பற்றினார். **அதுதான் கூட்டணி அமைக்கும் வித்தை.** 'மகஜன எக்சத் பெரமுன' எனப்படும் 'மக்கள் ஐக்கிய முன்னணி'யையும் (எம்.ஈ.பி), அப்போது இடதுசாரிகளின் தந்தையாக இருந்து பின் வலதுசாரியாகப் பரிமாணம் பெற்ற **பிலிப் குணவர்த்தனாவின்** வி.எல்.எஸ்.எஸ்.பி. கட்சியையும் **டபிள்யு.** தகநாயக்காவின், 'சிங்கள பாசாபெரமுன'வையும் இணைத்து கூட்டணி உருவாக்கினார். எனவே, இதன் அறுவடையாக 1956 வைகாசியில், 39.5 விழுக்காடு வாக்குகள் பெற்று, 95 தொகுதிகளில் 51ஐ வென்று ஆட்சியைப் பிடித்தார் பண்டா. அப்போது ஐ.தே.கட்சி பெற்றது 8 இடங்கள் மட்டுமே.

1970களிலும் இக்கதையின் மறுபதிப்பு. 1965–1970 ஐ.தே.கட்சி ஆட்சியில் நாடே நலிவுற்றது. முதலாளிகள் கொழுத்தனர்; ஏழைகள் இளைத்தனர். 1952 ஆம் ஆண்டு 100 ஆகக் கணிக்கப்பட்ட வாழ்க்கைச்செலவுச் சுட்டெண், 1970 இல் 122 ஆகியது. கிராமப்புறங்களிலே உயர்கல்வி கற்று வேலையற்ற வாலிபர் தெருவில் திரிந்தனர். வேலைப்படையில் 14 விழுக்காட்டினர் வேலையற்றவராயினர். 65 விழுக்காடு மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழ்ந்தனர். எனவே, அரசியல் குடும்பத்தொழிலாகிவிட்ட நிலையில், மேட்டுக்குடிச்சாயம் களைந்து – சோசலிச முகமூடி அணிந்து, மக்கள் தலைவி ஆகி, கணவர் காட்டிய வழியில் இன்னொரு கூட்டணி அமைத்தார் சிறீமாவோ அம்மையார். எல்.எஸ்.எஸ்.பி., சி.பி. இணைந்த கூட்டணிக்கு இப்போதைய பெயர் **ஐக்கிய முன்னணி.** ஐக்கிய முன்னணியின் வாக்குறுதிகளை நம்பி, ஜே.வி.பி. அமைப்பின் உறுப்பினர் அதன் வெற்றிக்கு மாடாக உழைத்தனர்; மக்களும் மயங்கினர். 1970 வைகாசியில் 90 இடங்களைப் பெற்று சிறீமாவோ பெரு வெற்றி அடைய, ஐ.தே.கட்சி பெற்றது 17 இடங்கள் மட்டுமே.

இனி மகளின் கதை. தந்தையைப் போல் தாய்; தாயைப்போல் மகள். 17 வருட ஐ.தே.கட்சியின் ஆட்சியை இரண்டேயிரண்டு சொற்களில் –தூசணய, பீசணய என – அதாவது உச்ச ஊழல், தாங்கமுடியாத அடக்குமுறை என வருணித்து, "தந்தையை – கணவனை இழந்த, இரு பிள்ளைகட்கான விதவைப் பெண்!", "உங்களில் ஒருத்தி" என தன்னை உருவகித்து, போருக்குச் செலவிடும் 2500 கோடியை மிச்சம் பிடித்து அற்புதங்கள் நிகழ்த்தப்போவதாகக் கூறிய சந்திரிகா அம்மையார், தந்தை, தாயைவிட ஒருபடி மேலேபோய் ஏழு கட்சிக் கூட்டணியை உருவாக்கி, அக்கூட்டணிக்கு கவர்ச்சிகரமாக **பொதுஜன ஐக்கிய முன்னணி** எனப் பெயரிட்டார். பதவியைப் பிடித்த கதை எல்லோருக்கும் தெரிந்தகதை!.

இதுவரை பண்டா குடும்பம் பதவிக்கு வந்த சுருக்கக் கதை சொல்லப்பட்டது. இனி – பதவிக்கு வந்தபின் நடந்த கதை; அதுவும் ஒரேமாதிரியான கதைதான். கூட்டணிகள் முறிந்த கதையும், வாக்குறுதிகள் மீறப்பட்டதால் வந்த வினையும், இவை எல்லாவற்றிற்கும் நிழல் திரை போட–திசை திருப்ப– தமிழன் தலையில் மிளகாய் அரைக்கப்பட்ட பெருங் கொடுமையும் பண்டா குடும்பச் சொத்துக்களாக, என்றும் வரலாற்றில் நிலைத்து நிற்கும். இவ்வாறாக கூட்டணி அமைக்கும் தொழிலைத் தொடங்கிய பண்டா 1956 ஆம் ஆண்டு, பிலிப்பை கைத்தொழில் அமைச்சராக்கினார். தொடக்கத்தில் முற்போக்கான தோற்றத்தைக் காட்டிய பண்டாவை நம்பி, நிலச்சீர்திருத்தச் சட்டமொன்றைக் கொண்டுவர பிலிப் முயன்றபோது, பண்டாவின் அமைச்சரவையின் படுபிற்போக்குத் தன்மை வெளிப்பட்டது. அமைச்சர்கள் பலர் எதிர்ப்புக் காட்டவே, இறுதியில் பிலிப், 1959 வைகாசியில் பதவி பறிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து இடதுசாரிகள், நாட்டில் பெரும் வேலைநிறுத்தங்களை நடத்தி–கைத்தொழில், துறைமுக, பொருண்மியத் துறைகளை நிலைகுலையச் செய்த கதை நீண்ட கதை. **புத்தர கித்த** தேரரை முன்னிறுத்தி 'எக்சத் பிக்கு பெரமுன'வை உருவாக்கி, இப் பிக்குகள் முன்னணியின் பத்து அம்சக்கோரிக்கையை ஏற்றுப் பதவிக்கு வந்த பண்டா, செல்வநாயகத்தோடு பேசத் தொடங்கவே, பேரினவாதிகள் வெகுண்டனர். 1958 ஆம் ஆண்டு சித்திரை 9 ஆம் திகதி, பண்டாவின் சுகாதார அமைச்சர் திருமதி **விமலா விஜயவர்த்தனா** தலைமையில் புத்தரபித்த தேரரின் பிக்குகள் அணி, பண்டாவின் வீட்டு வாசலில் மறியல் செய்யவே, **செல்வாவோடு தான் செய்த உடன்பாட்டைக் கிழித்து, பிக்குகள் முன்னிலையில் பண்டா வீசினார்.** இதற்கிடையில், தமிழருக்குத் 'தகுந்த பாடம்' படிப்பிக்க 1956, 1958 இன அழிப்புக் கலகங்களை நடத்திமுடித்தார். இவ்வாறாக பண்டா ஏறுக்கு மாறாக நடந்து, எவருக்காயினும் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு,

**- வே. பாலகுமாரன்**

'பண்டா குடும்ப அரசியல் முன்மாதிரி' ஒன்றை முதிசமாக விட்டுச்சென்றார்.

எனவே, அம்மையார் சிறீமாவோவும் 1970 களில், எல்.எஸ்.எஸ்பி. கட்சியின் என்.எம். பெரேராவிற்கு நிதி அமைச்சர் பதவி வழங்கி, அத்தோடு **கொல்வின், லெஸ்லி** போன்றோருக்கு மட்டுமல்ல சி.பி. இன் **பீற்றர் கெனமனுக்கும்** கூட வீடமைப்பு அமைச்சை வழங்கி, தொடக்கத்தில் ஆதரித்தார். ஆனால், அம்மையாரின் சாயமும் விரைவிலேயே வெளுத்தது. **அதன் பயன் வெகு விபரீதம் ஆகியது.** ஒடுக்கப்பட்ட – வறுமையில் வாழ்ந்த – கரவா, துறாவ, வகுகும்புற, பத்கம இளைஞர்கள் தமது வாழ்நிலையில் எந்த மாற்றமும் கொண்டுவரப்படாத நிலையில், 1971 சித்திரை கிளர்ச்சியை மேற்கொள்ள, **15-20 ஆயிரம் சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்து, ரத்வத்த குடும்ப மேலாண்மையை அம்மையார் நிலைநாட்டினார்.** அடுத்து, தமிழர் பக்கம் கவனத்தைத் திருப்பிய அம்மையார் செய்த கொடுமைகள் எண்ணிலடங்கா. 1972 புதிய யாப்பிலிருந்து, தமிழர் மத்தியிலே துரோகிகளை உருவாக்கியதிலிருந்து, தரப்படுத்தலிலிருந்து. தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளிலிருந்து, **தந்தை செல்வாவையே** தமிழீழக் கொள்கையை முன்வைக்கச் செய்து, ஈற்றில் **தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டத்தையே முகிழ்க்கச் செய்தார்.** இந்நிலையிலே, 7 வருட ஆட்சியில் நாடே திறந்த சிறைச்சாலையாக, பஞ்சம் பட்டினி நிலவ, இடதுசாரிகளில் பழியைப் போட்டு என். எம் பெரேராவை பலிக்கடாவாக்கி, 1975 புரட்டாதியில் அவரையும் அவரது கட்சியையும் தூக்கி வெளியில் போட்டார் அம்மையார். இறுதியில் வேறு வழியில்லாமல்–வேண்டா வெறுப்பாக – சி. பி யும் 1977 தொடக்கத்தில் வெளியேறியது. எனவே, இப்போது சந்திரிகா அம்மையார், பண்டா குடும்ப வித்தைகள் யாவற்றையும் சித்து விளையாட்டாக்கி பதவிக்கு வந்தபின், கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு தமிழர் வாழ்வைப் பறித்தெடுத்து, இறுதியில் சிங்களவரையே காரிருளில் தள்ளிவிட்ட நிலையில், எல். எஸ். எஸ். பியும், டி.யு.என்.எ.வ். கட்சியும் முரண்படும் நிலையில், நாம் கூற என்ன உள்ளது? -வரலாறு **திரும்பத் திரும்ப ஒரேவிதமாகவே நிகழ்கிறது** என்பதைத் தவிர.

**இப்போது இறுதியாக தண்டனைக் காலகட்டம்.** 1959 ஆம் ஆண்டு புரட்டாதி 29 ஆம் திகதி காலையில், அலரி மாளிகைக்குள் பிரவேசித்த **சோமராம தேரர்,** முன் விறாந்தையில் தன்னைக் கண்டு வணங்கிய பண்டா மீது, தனது அங்கிக்குள் இருந்த கைத்துப்பாக்கியை எடுத்து நேரே சுட்டார்! மருத்துவமனைக்குப் போகமுன்னரே பண்டாவின் உயிர் போய்விட்டது. பின் நடைபெற்ற நீதிமன்ற விசாரணையிலே பல திடுக்கிடும் உண்மைகள் வெளியாகின. களனி ரஜமகா விகாரை அதிபதியான புத்தரகித்த தேரர் மறைமுகமாக வணிக – கைத்தொழில் முயற்சிகளில் ஈடுபட்டதும், துறைமுகம் தொடர்பான ஒப்பந்தமொன்றைத் தான் விரும்பியவர்க்கு பண்டா கொடுக்க மறுத்ததால் அவரைப் பழிவாங்கத் திட்டம் தீட்டியதும், அதற்கு விமலா விஜயவர்த்தனா துணை போனதும், **கொலை ஒரு உள்வீட்டு வேலை** என்பதை விளக்கின. அடுத்து சிறீமாவோவுக்கான தண்டனை. 1977 தேர்தலில், குள்ள நரி 'டிக்கி யக்கி' ஜே.ஆர் தர்மிஸ்டராக வேடம் போட்டு 139 இடங்களைப் பெற, அம்மையார் எட்டு இடங்களையே பெற்றார். அன்றுதொட்டு இன்று வரை, அரசியல் **பாலைவனத்தில் திக்குத் திசை தெரியாமல் அம்மையார் அலைவதும்,** மகள்கூட தாயை வெறும் **இறப்பர் முத்திரையாக** பயன்படுத்துவதும் தெரிந்த கதை.

இப்போது பண்டாவின் குடும்பத் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் **சந்திரிகா அம்மையாருக்கு வரலாறு வழங்கப்போகும் தண்டனை** எவ்விதம் இருக்குமென்பது எமக்குத் தெரியாவிட்டாலும், உச்சத் தண்டனையாக அது அமையும் என்பதற்கான அறிகுறிகள், இப்போது மிகத் தெளிவாகத் தெரிகின்றன. 2000 ஆண்டுக்குள் அம்மையார் என்ன செய்யவேண்டுமென உலக வங்கி சட்டம் போட்டு விட்டது. இலங்கை வங்கி – மக்கள் வங்கி உள்ளிட்ட வங்கித்துறை, மின்வலு, தொலைத் தொடர்புத்துறை ஆகியன தனியார்மயமாக்கப்படுதல் வேண்டும்; கோதுமை மாவிற்கான மானியம் நிறுத்தப்பட வேண்டும்; உயர்கல்வி, சுகாதாரத் துறையில் செலவிடும் பணத்தை அறவிட வேண்டும்; பாடசாலைச் சீருடைகள் வழங்குவது நிறுத்தப்படல் வேண்டும்........ இப்படியாக, அது வேண்டும், இது வேண்டும் என பல்லவி பாடும் உலக வங்கி இறுதியாய், "சிறீலங்காவில் முதலிட, தனியார் நம்பிக்கைகொள்வதாயின் அமைதியே அவசியம்" என, முத்தாய்ப்பு வைக்கிறது.

("In a nutshell peace is essential to sustain private confidence in Sri lanka's investment prospects.")

எனவே, இவ்வாறாக பாரிய சாதனைகள், தனித்தன்மைகள் கொண்ட **"புகழ் மிக்க குடும்பமாக!"** பண்டா குடும்பம் அமைகின்றதென்பதில் என்ன ஐயம்? ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்



## முதலாம் பாகம்

### அத்தியாயம் ஏழு

### ( தொடர்ச்சி )

ன்பு சொன்னார், 'இந்த முழுவிடயமும் ர்ப்பாக்கியகரமானதென நான் நினை கிறேன்."

னக்கும் உனக்கும் ஒன்றும் செய்யவோ, டிவெடுக்கவோ முடியாது புரூஸ். வண்மண்டபம் முடிவெடுக்கிறது. நாம் வற்றை நடத்திவைக்கிறோம், அவ்வள தான்."

ரூஸ் யன்னலுக்குள்ளால் தொடர்ந்து ர்த்தபடி சொன்னார்: "பேர்கன் பெல்சனில் ன் அந்த மக்களைப் பார்த்தேன். ப்போது பலஸ்தீனத்திற்குள் புக யற்சிக்கிறவர்கள், அதே மக்களாகத்தான் ருக்க வேண்டும். அவர் கதிரையில் மர்ந்தபடி தொடர்ந்தார்: "நாம் முப்பது ருடங்களாக, இந்தப் பலஸ்தீன க்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகள் னைத்தையும் காற்றில பறக்க விட்டி க்கிறோம்."

ரூஸ் இங்கே பார், நீ சொல்வதை னும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால், ப்படியாக நினைக்கும் சிறுபான்மையான ரிவினர் நாங்கள் இருவரும் ஒன்றாக த்திய கிழக்கில் பணிபுரிந்தோம். எனக்கு ன்றை மட்டும் சொல்லிவிடு. போரி போது கட்சி மாறுகிற அரபுக்களைப் ற்றி ஒன்றன்பின் ஒன்றாக வந்து காண்டிருந்த அறிக்கைகளை, யுத்த ாரியாலயத்தின் இந்த மேசையிலிருந்தபடி ண்டேன். எகிப்திய ஆயுதப்படையினரின் லைவரே ஜேர்மனியருக்கு ரகசியங்களை ற்றது. ரோமெல்லை (Rommel) –சிறந்த ஜர்மன் டாங்கிப் படைகளின் தளபதி) ங்களை விடுவிக்க வந்தவராக வரவே க கெய்ரோ தயாராக இருந்தது. ஜர்மனியரிடம் சென்ற ஈராக்கியர்கள்,

> எனக்கு ஒன்றை மட்டும் சொல்லிவிடு. போரின்போது கட்சி மாறுகிற அரபுக்களைப் பற்றி ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டிருந்த அறிக்கைகளை, யுத்த காரியாலயத்தின் இந்த மேசையிலிருந்தபடி கண்டேன்.

ஜேர்மனியரிடம் சென்ற சிரியர்கள், நாசி டவாளியான ஜெருசலேம் மதகுரு, ணிக்கணக்காக இப்படியே சொல்லி கொண்டிருக்கலாம்.

இந்த விடயத்தில் வெண்மண்டபத்தின் ருத்துப்பக்கத்தை நோக்க வேண்டும். ாங்கள் மத்திய கிழக்கில் எங்கள் கௌரவத்தையோ அல்லது மத்திய ிழக்கில் எமக்குள்ள பிடியையோ விட்டுக்கொடுக்கும் அபாயமான காரிய ்தைச் சில ஆயிரம் யூதர்கட்காகச் செய்ய முடியாது.

பெருமூச்செறிந்தபடியே சுதர்லாண்ட் சொன்னார்: "இதுதான் நாங்கள் செய்யும் பிழைகளில் பரிதாபகரமானது. அப்படிச் செய்தும் நாம் மத்திய கிழக்கை இழக்கப் போகிறோம்."

"நீ உணர்ச்சிவசப்படுகிறாய் புரூஸ்."

"எந்த விடயத்திலும் சரி பிழை உண்டு. உங்களுக்குத் தெரியும்தானே."

ஜெனரல் சேர் கிளரென்ஸ் ரெவர் – பிறவுண் சோகமாகச் சிரித்தபடி தலையை ஆட்டினார்கள். "எனது காலத்தில் நான் சிறிதளவே அறிந்திருக்கிறேன். ஆனால் ஒன்று மட்டும் நான் நன்றாகவே அறிந்திருக்கிறேன். இந்த நாட்டு அல்லது எந்த நாட்டு வெளியுறவுக் கொள்கையும் சரி, பிழையை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததல்ல. சரியும் பிழையும், எனக்கும் உனக்கும் இவ்விடயத்தில் சரி பிழையைக் கதைக்க, விவாதிக்க அருகதை கிடையாது. சரியை மட்டும் வைத்து நடத்தப்படும் ஒரே ராஜ்யம், மோட்ச ராஜ்யம் மட்டும்தான் உலகின் அனைத்து ராஜ்யங்களும், பெற்றோலிலேயே ஓடுகின்றன. அரபுக்கள் பெற்றோலை வைத்திருக்கிறார்கள்.

புரூஸ் சுதர்லாண்ட் மௌனமாக அமர்ந்திருந்தார். பின்பு. " சரியை மட்டும் வைத்து நடத்தப்படும் ஒரே ராஜ்யம், மோட்ச ராஜ்யம் மட்டும்தான். உலகின் அனைத்து ராஜ்யங்களும் பெற்றோலில் ஓடுகின்றன. அதே வார்த்தைகளைத் திரும்ப உச்சரித்தார். "நீங்கள் ஒன்றை மட்டும் தெரிந்து கொண்டிருக்கிறீர்கள் சேர் கிளரேன்ஸ். எமது முழு வாழ்க்கையின் அர்த்தமுமே இந்த வசனத்தில் பொதிந்துள்ளது. நாங்கள் எல்லோருமே, மக்கள்......... நாடுகள்......... எல்லோருமே தேவைகளை அண்டி வாழ்கிறோமே தவிர, உண்மையை அண்டி அல்ல.

,ரெவர் – பிறவுண் முன்னால், சரிந்தபடி சொன்னார்: "கடவுள் தனது திட்டத்தில் ஓரிடத்தில், எங்களை ஒரு சாம்ராஜ்யத்தை ஆளும் சுமையைக் கொடுத்துள்ளார்.

"ஏன் என்று காரணம் தேடுவது எங்கள் வேலையல்ல."

சுதர்லாண்ட் முணுமுணுத்துவிட்டுத் தொடர்ந்து சொன்னார்: "ஆயினும் சவுதி அரேபியாவின் அடிமைச் சந்தைகளையோ, திருடியதற்கான தண்டனையாக ஒரு மனிதனின் கைகள் வெட்டப்படும் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டதையோ, என்னால் மறக்க முடியும் என நினைக்கவில்லை. பேர்கன் – பெல்சனில் நான் கண்ட அந்த யூதர்களை எப்படியும் மறக்க முடியாது."

"ஒரு போர்வீரனாக இருந்துகொண்டு, மனச்சாட்சியையும் கொண்டிருப்பது அவ்வளவு நல்லதல்ல. சைப்பிரசுக்குப் போகச்சொல்லி உன்னை வற்புறுத்த மாட்டேன்."

"நான் போகிறேன். கட்டாயம் போகிறேன், ஆனால் ஒன்றை மட்டும் சொல்லி விடுங்கள். ஏன் என்னைத் தேர்ந்தெடுத்தீர்கள்?"

மற்றையவர்களில் அநேகர் என்ன காரணத்துக்காக எமது நாடு அரபு ஆதரவாக இருக்கிறதோ, அதே பாரம்பரியத்தில் அரபு ஆதரவாளர்களாக இருக்கிறார்கள். எடுக்கப்படும் கொள்கைகளை அமுல்படுத்துவது தவிர, வேறெதுவும் ஒரு சுத்தமான போர்வீரனால் முடியாது.. இந்த அகதிகளை மேலும், வேதனைப்படுத்தக் கூடிய யாரையும் சைப்பிரசுக்கு அனுப்ப விருப்பமில்லை. இப்பிரச்சினை, மிகுந்த புரிந்துணர்வோடும், கழிவிரக்கத்தோடும்

> நீ இந்த விடயத்தில் வெண்மண்டபத்தின் கருத்துப்பக்கத்தை நோக்க வேண்டும். நாங்கள் மத்திய கிழக்கில் எங்கள் கௌரவத்தையோ அல்லது மத்திய கிழக்கில் எமக்குள்ள பிடியையோ விட்டுக்கொடுக்கும் அபாயமான காரியத்தைச் சில ஆயிரம் யூதர்கட்காகச் செய்ய முடியாது.

அணுகப்பட வேண்டிய ஒன்றாகும்."

சுதர்லாண்ட் எழுந்து நின்று சொன்னார்: "நான் சில சமயங்களில் யூதனாகப் பிறப்பது எப்படியான சாபமோ, அப்படியேயான சாபமே, ஒரு ஆங்கிலேயனாகப் பிறப்பதுவும் என்று நினைப்பதுண்டு.

சுதர்லாண்ட் சைப்பிரஸ் பணியை ஏற்றுக்கொண்டார். ஆனால் மனதுக்குள் பயமிருந்தது. தான் ஒரு அரை யூதன் என்று ரெவர் பிறவுணுக்குத் தெரிந்திருக்கலாமோ என ஐயப்பட்டுக் கொண்டார்.

பல நாட்களுக்கு முன் அவர் எடுத்திருந்த ஒரு முடிவு கோரமான ஒரு முடிவு......... இப்போ திரும்பவும் வந்து அவரை ஆட்கொள்ளப் பார்க்கிறது.

வேதாகமத்தை வாசிப்பதில் ஆறுதல் பெற்றதை, ஞாபகப் படுத்திக் கொண்டார். நெடியுடன் கழித்த அந்த வெறுமையான வருடங்கள் தான் காதலித்த அந்த இயூறேசியன் பெண்ணின் இழப்பு எல்லாமே மேலும்மேலும் மன அமைதியைத் தேடும் தேவையினுள் ஆழமாகத் தள்ளி விட்டன. ஒரு போர் வீரனாகிய தான், ஜோசுவா (Joshua), கிடியோன் (Gidion),- ஜோவாப் (Joap),ஆகியோரின் பிரமாண்டமான போர் முறைகளை வாசிப்பது எவ்வளவு பொருத்தமானது என நினைத்தார். உன்னதமான வேதாகம நாயகிகளான றூத் (Ruth), எஸ்தர் (Esther), சாரா (Sarah), மேலும் டெபோரா (Deborah) ஆகியோர் பற்றியும் வாசிப்பதில் மகிழ்ச்சியடைந்தார். டெபோரா மற்றும் தன் இனத்தவரின் வீராங்கனையான ஜோன் ஒவ் ஆர்க் (Joan of Ark) 'விழித்தெழு, விழித்தெழு டெபோரா: விழித்தெழு விழித்தெழு" போன்ற வசனங்களை வாசிக்கும்போது அவருள் ஏற்பட்ட உணர்ச்சியை நினைத்துக் கொண்டார்.

டெபோரா! அதுதான் அவரது தாயாரின் பெயர்.

டெபோரா டேவிஸ், எளிதில் காண முடியாத அழகான பெண். ஹரோல்ட் சுதர்லாண்ட், அவளால் கவரப்பட்டதில் ஆச்சரியம் இல்லை. அந்த அழகிய நடிகையைப் பார்ப்பதற்காக "ரேமிங் ஒவ் த சிறூ" (Taming of the Shrew) என்ற நாடகத்தைப் பதினைந்து முறை பார்த்த பொழுது, சுதர்லாண்ட் குடும்பத்தினர் பெரிதுபடுத்தவில்லை. அவன் தனது கைச்செலவுக்குக் கிடைக்கும் பணத்திற்கு மேலாக அவளுக்காகப் பூக்கள் வாங்கவும், பரிசுகள் வாங்கவும் செலவழித்தபோது, உதாரணகுணத்தோடு சிரித்துக் கொண்டனர். இது ஒரு சிறு பிள்ளைத்தனமான ஈடுபாடு என்றும், விரைவில் அது விலகிவிடும் என்றும் நினைத்தனர்.

ஹரோல்டால் அவளை மறக்க முடியாமல் போனதோடு, குடும்பத்தினரின் சகிப்புத் தன்மையும் நின்றுவிட்டது. அவளை சுதர்லாண்ட் மேட்டு நிலங்களுக்கு வரும்படி விடுக்கப்பட்ட உத்தரவுக்கும் பணிய மறுத்து விட்டான். இதன் பிறகுதான், சேர் எட்கார், சுதர்லாண்ட் மேட்டு நிலங்களுக்குப் பயணம் செய்ய மறுத்துவிட்ட இந்த அற்புதமான இளம் நங்கையைக் காண லண்டனுக்குப் பயணமானார். டெபோரா அழகாயிருந்தது போலவே, புத்திக் கூர்மையும், சாதுர்யமாகப் பேசக்கூடிய திறமையும் கொண்டவளாதலால், மிகச் சுலபமாகச் சேர் எட்காரைத் திணறடித்து முற்றாகவே அவரைக் கவர்ந்து விட்டாள். அங்கேயே, அப்போதே சேர் எட்கார் தனது மகன் அதிஷ்டசாலி என முடிவெடுத்துக் கொண்டார். எல்லாவற்றுக்கும் மேலாக, சுதர்லாண்டுகள் நடிகைகளை நோக்கிக் கவரப்படும் பாரம்பரியத்தைக் கொண்டிருந்ததை எல்லோரும் தெரிந்திருந்ததோடு, அவர்களில் சிலர் குடும்பத்தின் நீண்ட சரித்திரத்தில் உன்னதமான எஜமானிகளாகவும் திகழ்ந்திருக்கிறார்கள். ஆயினும், டெபோரா டேவிஸ் யூதப் பெண்ணாகவிருந்த சிக்கலான பிரச்சினையிருந்தது. ஆனால், இதுவும் அவள்

**லியோன் யூறிஸ்**

இங்கிலாந்து திருச்சபை முறைகளில் பயிற்சி பெற இணங்கியதோடு, தீர்ந்து விட்டது.

கரோல்டுக்கும் டெபோராவுக்கும் மூன்று குழந்தைகள் இருந்தனர். அவர்களுடைய ஒரே மகளான மேரி இருந்தாள். பொறுப்பற்ற மகனான அடம் (Adam) இருந்தான். இதைவிடப் புரூசும் இருந்தான். இவர்களில் புரூசே வயதில் முதிர்ந்தவனாகவும், டெபோராவின் செல்ல மகனாகவும் இருந்தான். அந்தப் பையன் தனது தாயை மிகவும் மரியாதையோடு நேசித்தான். எவ்வளவு நெருக்கமாக இருந்தாலும், தனது சொந்த இளமைக்காலத்தைப் பற்றியோ, தனது பெற்றோரைப் பற்றியோ ஒருபோதும் கதைத்ததில்லை. அவனுக்குத் தெரிந்ததெல்லாம், அவள்

தொடரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "சத்ஜெய" இராணுவம் கிளிநொச்சி நகரைப் பிடிக்குமா?

'சத்ஜெய' இராணுவ நடவடிக்கை ஆரம்பித்து 17 நாட்கள் கடந்துவிட்ட நிலையில் கிளிநொச்சி நகரம் இன்னமும் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கவில்லை. மிகப் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மூலம், கிளிநொச்சியை இவ்வளவு காலப்பகுதிக்குள் கைப்பற்ற முடியாமல் போனமை இராணுவ, இராஜதந்திரரீதியிலும் மற்றும் பத்திரிகைகளின் மத்தியிலும் சற்று ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. முல்லைத்தீவு படைத்தளத்தைப் புலிகள் தாக்கி அழித்திருப்பினும் இராணுவம் மேற்கொள்ளும் பாரிய படையெடுப்புக்களைப் புலிகளால் எதிர்கொள்ள முடியாது என்பதே, இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும். வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இவ்வாறான மதிப்பீட்டையே செய்தனர். இதனால் கிளிநொச்சி மீது இராணுவம் பாரிய தாக்குதலை மேற்கொள்ளுமாயின் ஒன்றோ அன்றி இரண்டொரு நாட்களில் அரசு கைப்பற்றும் என்றே மதிப்பீடு செய்தனர். ஆனால் தள நிலைமை அவ்வாறு இருக்கவில்லை. இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளை ஆரம்பித்து முதலாம் நாள் புலிகள் நடாத்திய உக்கிர தாக்குதலால் இராணுவத்தின் முன்னேறும் முயற்சி பாதிக்கப்பட்டதோடு, பலத்த உயிர் மற்றும் தளபாட இழப்புக்களையும் இராணுவம் சந்திக்கவேண்டி வந்தது.

இவை இரண்டும் பெரும்பாலும் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகவே இராணுவ வட்டாரங்களில் இருந்தும், இதன் பின்னரும்கூட இராணுவம் அடுத்த சில தினங்களுக்குள் கிளிநொச்சியை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதனைக் கொழும்பில் உள்ள இராஜ தந்திரிகளும் பத்திரிகைகளும் கூட முழுமையாக நம்பின. இராணுவம் எடுத்த முதல் இரண்டு கட்ட நிகழ்ச்சிகளும் தோல்வியான ஓரிரு நாட்களுக்குள் இராணுவம் கிளிநொச்சி நகரை அடைந்துவிடும் என கொழும்பில் உள்ள இராஜதந்திரி ஒருவர் தெரிவித்ததாக ஏஜென்சி செய்தி ஒன்று தெரிவித்தது. ஆனால் தள நிலைமை அந்தளவிற்கு இராணுவத்திற்குச் சாதகமாக இருக்கவில்லை. ஆனால், இராணுவம் மேற்கொண்டுள்ள பாரிய நடவடிக்கைகளின் மூலம் கிளிநொச்சி நகரை இராணுவம் வந்தடையாது என்றோ தற்பொழுது பரந்தனில் நிலை கொண்டுள்ள பகுதிகளில் இருந்து பின் வாங்கிவிடுவார்களென்றோ கூறமுனையவில்லை. இராணுவம் கிளிநொச்சியை இன்னும் பல இழப்புக்களின் பின் சிலசமயம் ஆக்கிரமிக்கலாம் சில சமயம் பின்வாங்கிச் செல்லலாம். ஆனால், எது எவ்வாறு இருப்பினும் கிளிநொச்சி சமரானது பலரது கணிப்பையும் மதிப்பீட்டையும் தவறாக்கி விட்டது என்பதே இங்கு முக்கியமானதாகும்.

வடக்கு-கிழக்கு போர் முனை பற்றியும் விடுதலைப் புலிகள் பற்றியும் பொதுவாகவே களத்திற்கு அப்பால் உள்ள அனைவரும் தவறாகக் கணிப்பீடு செய்கின்றனர். இதற்கு அரசாங்கத் தரப்பு வெளியிடும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதே ஆகும். அவ்வாறு இல்லாவிடில் அவர்கள் தவறான மதிப்பீடுகளைச் செய்வதற்கு நியாயமில்லை. ஆனால் இவர்களில் உள்ள தவறானது, சிறிலங்கா அரசு பொய்கள் பலவற்றைக் கூறியது எனக் கடந்தகால அனுபவத்தில் இருந்து தெரிந்து கொண்டபோதும், மீண்டும் மீண்டும் அரசாங்கத்தின் தகவல் அடிப்படையில் முடிவிற்கு வருவதேயாகும். இந்த நிலை தொடருமாயின், இனிமேலும் இவர்கள் விடுதலைப் புலிகள் பற்றியோ தமிழீழப் போராட்டம் பற்றியோ சரியான முடிவிற்கு வரமாட்டார்கள். காலத்திற்குக் காலம் அவர்களுக்கு ஆச்சரியம் அளிக்கும் சம்பவங்களே இடம்பெறக் கூடும். இதனால் இவர்களின் மதிப்பீடுகள் தவறானவையாக மதிப்பிழந்து போகும்.

விடுதலைப் புலிகள் பலம் குறித்து மதிப்பீடு செய்வதென்பது இலகுவானதொரு காரியமல்ல. இதனை விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் போரிட்ட இந்தியத் தரப்பினால் கூட மதிப்பிடமுடியவில்லை. ஆகையினால் புலிகள் ஒ பிரதேசத்தில் இருந்து பின்வ ங்குகின்றார்கள், போரிடுவதை தவிர்க்கின்றார்கள் என்றா இதனைப் புலிகள் திட்டமிட் ரீதியில் செய்கின்றார்களே ஒழிய, தப்பி ஓடுகின்றார்கள் என்றோ பின்வாங்குகின்றார்கள் என்றோ கொள்ளமுடியாது. இதனை அவர்களின் பலவீ மாகவும் கொள்ளமுடியாது.

இந்த வகையில் புலிகள் ஒரு போர்க்களத்தில் எவ்வாறு செயற்படுகின்றார்கள் என்பது அவர்களின் போர் யுக்தியா இருக்குமே ஒழிய, அதை அவர்களின் பலத்தை மதிப்பிடுவதற்கான அளவு கோலாகப் பயன்படுத்துவது தவறானதாகும். ஆகையினால் விடுதலைப் புலிகளின் யுக்திகள், நோக்கம் என்பவற்றை விளங்கிக் கொள்ளாது புலிகளின் பலம், பலவீனம் பற்றிப் பேசுவதும் சிறிலங்கா இராணுவம், அரசியல்வாதிகளின் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு முடிவுகள் எடுப்பதும் எப்பொழுதுமே தவறானதாகவே இருக்கும். ✷

# தென் தமிழீழப் போரரங்கு...

## தாக்குதல் இலக்குகளுக்கான போர்வலய எல்லை - கிழக்கில் - தமிழீழத்திற்கு வெளியேயும் சென்றுள்ளது.

நகர்த்தும் மூலோபாயத்தை ஜெனரல் அனுருத்த ரத்வத்த அவர்கள் கையாண்டார் என்பது பழைய கதை.

முழுப்பலத்தையும் பிரயோகித்தும் குடாநாட்டையே பூரணமாக விழுத்த முடியாமல்பரிதவிக்கையில், கிழக் கையும் இழந்துவிடும் தறுவாயை நோக்கி அவர் போய்க்கொண்டிருப்பது புதிய கதை. வடக்கில் பெற்ற இராணுவ வெற்றியை விடப் பூதாகரமானதான அரசியல் - இராணுவத்தோல்வி, அவர்கட்குக் கிழக்கிலிருந்து எழுகின்றது. வடக்கைக் கைப்பற்று வதைவிடவும் அரசியல் முக்கியத்துவம் மிக்கது கிழக்குப் பாதுகாக்கப்படுவதே என்பதைச் சந்திரிக்கா அரசாங்கம் இனி உணரத் தலைப்பட்டாலும், காலம் ஏற்கனவே பிந்திவிட்டது. இப்போது - எங்கிருந்து எங்கும் படைகளை நகர்த்த முடியாமலும், எதைக் கைவிட்டு எதைப் பாதுகாப்பது என்று புரியாமலும் சிங்கள தேசம் தம்மீது பொழியப்போகும் வசைமாரியைத் தவிர்க்க முடியாமலும், தம்மை நோக்கி வரும் மாபெரும் வரலாற்றுத் தோல்வியைத் தடுக்க முடியாமலும் - வடக்கு, கிழக்கு இரண்டையுமே இழந்துவிடும் கையறுநிலை, சந்திரிக்கா - அனுருத்த அரசாங்கத்தைச் சூழத்தொடங்கும் நாள், வெகு தூரத்தில் இல்லை. இதன் பெறுபேறாக,

> வடக்கைக் கைப்பற்றியதைவிட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது கிழக்கைப் பாதுகாத்திருக்க வேண்டியதே என்பதை, காலம் பிந்தியே அரசு உணரப்போகிறது.

காலம் செய்யும் கோலமாய், தோல்விகளால் நிறைந்த தமிழீழப் போருக்குள் தம் படைகள் ஆப்பிழுத்த குரங்காய் அகப்பட்டுக்கொண்டதைச் சிறிலங்கா தேசம் கண்ணெதிரே காணுகையில், தென்னிலங்கையை நெருக்கும் இராணுவ ரீதியான அழுத்தத்தினால் தம் நாட்டின் பொருளாதார சக்தி சிதைந்துருகுவதை நேரடியாகப் பட்டறிகையில், போரையே வெறுக்கும் மன விரக்திக்கு தாம் உள்ளாகையில், சிங்கள தேசத்தை அழிவிற்குள் தள்ளிய வரலாற்றுப் பழியை, சிங்கள மக்கள் பண்டாரநாயக்காவின் புதல்வியின் சுமத்துவார்கள். மைத்துனரின் மீதும் சுமத்துவார்கள். ! ✷

(சிறுகதை)

# பாலம்...

முடியவில்லை.

அவனுள் நடக்கின்ற போராட்டங்களை அம்மா புரிந்திருக்கமாட்டாள். பாசம்......... ஒடுங்குதலற்ற உணர்வுகளை உள்வாங்கி நேசிக்கிற பாசம் அவனுக்குத் தேவையாயிருந்தது.

"எல்லா அம்மாக்களுமே இப்படித்தானா........? பிள்ளையின்ரை உணர்வுகளைப் புரிஞ்சுகொண்டு நடக்கிற தாய்மார் ஒருத்தருமே இருக்காயினமோ?"

அவனுக்கு அழுகை வந்தது.

"மனுசனுக்கு மனுசனாற்தான் துன்பம். அதை எதிர்த்து நிக்கிறதுக்காகப் போராடலாமே தவிர அழக்கூடாது".

மனதுக்குள் யாரோ உரக்கச் சத்தமிட்டார்கள். இருதயத்தின் மனதால் உணரமுடிந்த அதன் ஆழம்வரை அந்தக் குரல் நீண்டது. கணத்துக்குக் கணம் இருதயம் இளகி...... இறுகி...... இரும்பாகி நெருப்பாகி....... விழிகளில் நீர் காய்ந்து வரண்டு போனது.

"எங்கட காலத்தில பக்கத்து வீட்டில என்ன நடக்குதெண்டு தெரியாமத்தான் வளந்தனாங்கள்".

இப்படிச் சொல்லிக்கொள்வதன் மூலம் பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பாலம் அமைக்கப் பார்ப்பாள் அம்மா. பாலத்தூண்களாய்ப் பாசைகளை வீசுவாள். அப்பொழுதெல்லாம் அவள் மனதுக்குள் எரிமலைகள் சிதறிக் கொண்டிருக்கும்.

"ஈராக்கிலும் குவைத்திலும் எவனெவனோ எண்ணைக்கப்பலை எரிக்கிறான். கடலில எண்ணையும் புகையும் தான் கலக்குது. ஆனா இஞ்சை....

எட்டி விளக்கை அணைத்தான். நெஞ்சுக் கூட்டிற் சங்குகள் ஊதின. முரசம் அதிர்ந்தது. நட்சத்திரம் தேடும் முயற்சியில் விழிகள் வானில் மோதின. அவைகளை மூடப்பிடிக்கவில்லை. விளக்கு எரிந்துகொண்டே இருந்தால் அவன் தேடும் நட்சத்திரம் அவனை, அவன் மனத்தை, விழிகளின் வேதனையை.......மொத்தத்தில் அவனுள் நிகழ்கின்ற போராட்டம் அனைத்துதையும் அது உணர்ந்து கொள்ளும். சூழ்ந்த இருளினை உரிக்க அது இறங்கிவரும்.

விழிகள் இமைகளை அழுத்தின.

மீண்டும் தனிமை......

வெறுமை......

அடிக்கடி தூக்கம் கலைந்தது. ஏதோ ஒன்றால் அழுந்தப்பட்டது. உடல் திடுக்கிடும்போதெல்லாம் உள்ளே குரட்டை ஒலியும், வெளியே காற்றின் அதிர்வுகளும்..... கண்களைத் திறக்கும் போதெல்லாம் புண்பட்டகாயம் புண்படுவதைபோலச் சகிக்கமுடியாத வேதனை. தூங்கப்பிடிக்கவில்லை. படுத்திருக்கவும் மனம் வரவில்லை. ஒளியுமல்லாத இருளுமல்லாத கலப்படமான காட்சிகள் குடிலுக்குள் ஓடிக்கொண்டேயிருந்தன.

தட்டிக்கதவை யாரோ பலமாகத் தட்டுவது போலிருந்தது. விளக்கைத் தேடினான். வைத்த இடத்திற் காணவில்லை. வானில் நட்சத்திரங்கள் மின்னின.

"காத்து, பூவசாய்க்காத காத்துத்தான் உயிர்வாழ அவசியம், இதுகாத்தில்ல, எங்களைச் சுத்தி வீசுறது காத்தில்ல. இது உள்வாங்கினா மூச்சு முட்டுது. செத்துப் போகிற மாதிரியும், சாகடிக்கப்படுகிற மாதிரியும்.....

இது ரணம். தொடத்தொட வலிக்கும். எங்கட மண்ண இந்த வீட்ட, அடுப்படிய.... எல்லாத்தையுமே காத்திட்டக் குடுத்திட்டு விளக்கப் பொத்திக் கொண்டு தள்ளித்தள்ளிப் போறதில அர்த்தமில்ல. ஏனெண்டா ஓட ஓடக்காத்துத் தூரத்தும். அம்மாவுக்கு இது விழங்கவில்லை. விளக்கத் தூக்கிக் கொண்டுபோய் ஏதோ ஒரு மூலையில போட்டிட்டிட்டான்".

மனதுக்குள் சலிப்பு நிறைந்தது. எழுந்துபோய்த் தட்டியைத் தள்ளினான்.

தூரத்தில் தீ, கடல் எரிந்து கொண்டிருந்தது. நீரைக்கிழித்துத் தீப்பிழம்புகள் வானில் விரிந்தன. ஓங்கி அடிக்கும் அலைகளின் நுரையோடும் தெறிக்கும் நீரோடும் சிவப்பாய்.....கடலெல்லாம் ஒரே செஞ்சிவப்பாய்...

எண்ணை நீரிற்கலந்த நிறமல்ல அது, என்றாலும் விளக்கில் நிற தால் எரியும்போல் இருந்தது. திரும்பிக் குடிலைப் பார்த்தான். காற்றின் வீச்சால் அள்ளுண்ட மனலினுள் பாதி புதைந்து வெளித்தெரிந்த குப்பி ஒன்று தேடுவாரற்றுக் கிடந்தது. எடுத்துக்கொண்டு கடலை நோக்கி ஓடத் தொடங்கலானான். ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை



# மனிதம் செய்தி

தாமரைச்செல்வி

ண்ணுக்கெட்டாத தொலைவில் வெடி பாசைகள், காதுகளைக் கிழிக்கும் ாகன இரைச்சல், மின்னி மின்னி றையும் வெளிச்சக் கோளங்கள், கவச ாகனத்தின் தீயுமிழும் கண்கள், ல்லாமும் மயான கோர இரவுகளின் ந்தச் சாம ராத்திரியில் இதயத் தசையை ண்டு வளர்ந்த நகங்கொண்ட கைகளால் ரோ பிழிந்தார்கள்.

த்தனையோ சாவீடு, ஒப்பாரி, ஓலங்கள் ன்றெல்லாம் பார்த்த பாறை மனது ானிது என்றாலும், நாய்களின் ஊழைச் த்தத்தைச் சகிக்க முடியவில்லை.

*நித்திரை பார்த்து*
*ிம்மதியாய் பாய்விரித்து*
*த்தனை காலம், ஓ......*
*த்தனை காலம்.........."*

பருமூச்சுகளிடையே சொற்கள் விழுந்து தறித்தபோது, அவன் ஒவ்வோர்


> இது ரணம். தொடத்தொட வலிக்கும். எங்கட மண்ண இந்த வீட்ட, அடுப்படிய.... எல்லாத்தையுமே காத் திட்டக் குடுத்திட்டு விள க்கப் பொத்திக் கொண்டு தள்ளித்தள்ளிப் போறதில அர்த்தமில்ல, ஏனெண்டா ஓட ஓடக்காத்துத் துரத்தும்.

ழுத்தாய் எழுதத் தொடங்கினான்.

ிழுத்து மூடியிருந்த தட்டிக் கதவைக் ாற்று மிதித்ததால் ஊசலாடிக்கொண்டி ந்த உயிர் உடலை விட்டுப் பிரிந்தது.

"... சனியன் பிடிச்ச காத்து......." அவன் ாற்றை மனதுக்குள் சபித்து கொண்டான். நெஞ்சில் ஒரு கணம் ம்மாவின் நினைப்பு.

இருட்டு, தடுமாற்றம், விளக்கு அணைந்து போயிற்றே என்ற கவலை, னம் கலங்கி மேலெழுந்த நினைவுகளை ரட்டியடித்தது. இனிமையாய் இருக்கும்




இரவுகள் இப்படி இடைநடுவிற் தைந்து போவதொன்றும் புதிதில்லை தான்.

னிந்து எதையோ எழுதிக் கொண்டி ந்த அவனின் கைகள், இறந்துபோன ப்பி விளக்கைத் தேடி இருட்டில் அலைந்தன.

கொஞ்ச நேரத்துக்கு முந்தி என்னமாய்க் கொஞ்சிக், குலவி, தலைகோதி,

....இந்தக் காத்து, ஏன் மனுசர் மாதிரித் டீர் திடீரெண்டு இப்பிடி மாறுது ......?"

கேள்வி எழுந்தபோது, ஆழமறிய முடியாத தொலைவில் கோபம் எட்டிப்பார்த்தது. சிலவேளை, காற்று கைகளில் அகப்பட்டிருந்தால் நிச்சயமாய் அதை அவன் அறைந்திருப்பான். கோபத்தில் மனது கன்றிச் சிவந்தது.

"அப்போதே இந்த விளக்குச் சுடரைப் பாது காத்தி ருக்கலாம். என்ர அப்பா அல்லது அப்பாவின்ர அப்பா குடிற் சுவரப் பலமா ப்போட்டு, தட்டிய ஒழுங்காகக் கட்டி யிருந்தா இது சாத் தியப்பட்டிருக்கும். ஆனா ....."

சற்றுமுன் கோபத்தில் பிறந்த மனது சிறகுடைந்து வேதனைச் சேற்றில் விழுந்து.... சலிப்பில் முகஞ்சுழித்து...... என்ன மனமிது.

இமைகள் உறுத்தியபடி...... முகத்துக்கு நேரே சிரிப்பு மாறாது சிடுசிடுப்பும், சினமும் கூட ஒட்டியிருக்கின்ற அந்த முகம்.......

"இந்தக் கத்தும் அம்மாவப் போலத்தான். கொஞ்சிக் குலாவும், அழுது புலம்பி ஆர்ப்பாட்டம் போடும்......... சீறிச் சினக்கும்...... எப்பிடியிருந்தாலும் அம்மா அடிக்கமாட்டா. எதுக்கெடுத்தாலும் திட்டிற அம்மாவுக்கும் காத்துக்கும் இதிலதான் கொஞ்சம் வித்தியாசம். காத்து நெத்தியில குத்திக் குப்புற விழுத்தும்"

குப்பி விளக்கு நிலத்தில் உருண்ட சத்தம் அம்மாவிற்குக் கேட்டிருக்க வேண்டும்.

"கிடந்த கொஞ்ச மண்ணெண் ணையையும் கவிட்டுப் போட்டானாக்கும். நாளைக்கு மூத்திரத்தைப் பெஞ்சு எரிக்கட்டும்" மூலையில் சாய்ந்திருந்த அம்மாவின் கொச்சையான கோபக்குரல் காற்றில் உரசிப் பற்றியது.

அவன் திடுக்கிட்டான். மனதில்

நினைவுகள் தடம்புரண்டபோது கையில் தட்டுப்பட்ட விளக்கு மீண்டும் உருண்டு திசை மாறியது. வார்த்தைகளால் சூடேறிய காற்று முகத்தில் மோதி எரிக்கத் தொடங்கியது.

"கொஞ்ச நேரத்துக்கு முந்தி எரிஞ்சு கொண்டிருந்த விளக்கு எப்பிடி நூந்தது. அம்மாவுக்கு அது தேவையில்லாச் சிந்தனை. ஆனால் குப்பி சரிஞ்சபோது மட்டும் சிதறிப் போனாள்"

அவனுள் எல்லாம் அறுந்துபோனதாய் ஒரு உணர்வு.

"அம்மா ஏன் இப்பிடி"

சிந்திக்கச் சிந்திக்கத் தலை சிதறிவிடும்போல் ஒரு பிரமை. அறைக்குள் கூடு கட்டியிருந்த இருட்டுப் பயமுறுத்தியது. விளக்கைத் தேடினாள். வெளியில் நாய்கள் ஊளையிட்டன. அவனால் சகிக்க முடியவில்லை. நாய்கள் குரைப்பதை நிறுத்தவேயில்லை.

தட்டுத்தடுமாறிக் குசினிக்குள் நகர்ந்தான். வெளியில் வந்து தீப்பெட்டி தட்டியபோது, அம்மா கோழித்தூக்கத்திலிருந்தாள். வாய் எதையோ முணுமுணுத்துக்கொண்டி ருந்தது.

ஆரம்பத்தில் அம்மா அன்பாய்த்தானிருந்தாள். நாட்கள் நகர நகர அவனிலிருந்து அவளோ அல்லது அவளிலிருந்து அவனோ ஒருவரிலிருந்து ஒருவர் விலகிக் கொண்டேயிருந்தனர்.

விரைவில் வீடு பிளவுபடும் "சச்சரவு களோட சுத்திச் சுத்தி வாறதை விட வெட்டிமுறிச்சிட்டு எங்கையாவது ஒரு ஓரமா ஒதுங்கிப் போயிடவேணும்".

அவனுள் இவ்வாறு எண்ணிக் கொள்வான். எண்ணை விக்கிற விலையில இந்த மாதிரி விளக்கைத் தூண்டி விட்டிட்டு துலைவான் என்னத்தை வெட்டி முறிக்கிறானோ...."

அம்மா நீட்டி முழக்குவாள். "போராட வலுவில்லாத மனசில்தான் கோபம் வருமோ? அவனுள் கேள்வி எழும். விடை தேடும். முடிவில் அது கூர்மழுங்கிப் போகும்.

அடிக்க அடிக்கச் சுணை குறையிற மாதிரி அம்மா பேசப்பேச அந்தப் பேச்சே கதையாய் கவிதையாய் வியாபிக்கும். எல்லாம் மீறி எங்கும் ஒரு சந்தோசம் துளிர்விடும். இப்போதோ மனம் வரிந்து கட்டிக்கொண்டு "சண்டைக்கு" நிற்கிறது.

எரிந்து கொண்டிருந்த தீக்குச்சி கையில் சுட்டபோதே நிகழ்கால வாழ்க்கை பூதாகரமாய்க் கண்களுக்கு முன் விரிந்து உடலெங்கும் பரவியது.

"மூச்சுத் திணறுகிற மாதிரிக் கையையும் காலையும் அடிச்சு முறிச்சு இழுத்துக் கொண்டு போறமாதிரி........ கொண்டு போய்...... எதுக்குள்ளேயோ...... வார்த்தை யால் வர்ணிக்க ஏலாத ஒரு பயங்கரத்துக்குள்ள தள்ளிவிட்ட மாதிரி...... ஏன்.......ஏனிப்படி......."

வெறுமையாய் சூனியமாய் இருதயம் இயல்பு மீறித் துடித்தது. கைகள் நடுங்கத் தீக்குச்சியைப் பற்றவைத்தபோது முகத்தில் முத்து முத்தாய் வியர்வைத் துளிகள். அவனுள் போராட்டம்

நடந்ததற்கு அடையாளமாய் அவை நிலத்தில் விழுந்து தெறித்தன.

"ஏனிப்படி இருட்டுக்குப் பயமா?"

எங்கிருந்தோ எழுந்த கேள்வியைத் துரத்தியபடி தூரத்தில் வெடியோசைகள் எழுந்து அதிர்ந்தன.

குச்சியில் மிளிர்ந்த சுடர் காற்றில் அலைந்தலைந்து நிலை கொள்ளாமல் அணைந்துபோயிற்று.

குளிர்ந்த தீப்பெட்டியை சூடாக்க, அருகில் பூசியிருந்த மருந்தோடு உரசி, குச்சியைப் பற்றவைத்து, ஒளிச்சுடரைக் கரங்களுக்குள் அணைத்துப்பாதுகாத்து நீண்ட போராட்டத்திற்குப் பின் விளக்கை ஏற்றினான். வெளிச்சம் பரவியது. அருகில் அசைவு, நீண்டதாய் ஒரு நிழல், நிமிர்ந்தான்.

"விடிய நேரத்துக்கு எழும்பவேணும், நூத்துவைச்சிட்டுப் படுதம்பி" அம்மாதான். இத்தனை பரிவோடு வந்த வார்த்தை களைத் தட்ட முடியாமற் தடுமாறினான். காற்று விளக்கின் சுடரை அசைத்து, அவன் தலையைக் கோதிக் கடந்தது. மனதில் அந்தகாரமாய் இருள்.

> "மனுசனுக்கு மனுசனாற் தான் துன்பம். அதை எதிர்த்து நிக்கிறதுக்காகப் போராட லாமே தவிர அழக் கூடாது".

"அம்மா இந்தக் குடிலுக்க எப்பவுமே சந்தோசமாய்ப் படுத்தெழும்பக் காத்து விடாது. வெளியில் இந்தத் தட்டி மறைப்புக்குப் பின்னால, திண்ணையில படுத்தா உனக்கிது புரியும்"

பொங்கிய வார்த்தைகளைக் கொட்டத்தான் எண்ணினான். "ஆனால் விளக்கு நூந்தா நித்திர வருமெண்டு அம்மா நினைக்கிறாபோல.... சீ அப்பிடியும் இருக்காது. ஏனெண்டா நூந்தாப்பிறகும் நித்திரை இல்லாம எத்தினையோ இரவுகளில அம்மா புரண்டு புரண்டு படுக்கிற சத்தம் கேட்டிருக்கு. விளக்கு நூந்தா நித்திரையும் வராது வெளிச்சமும் இருக்காது. ஆனா என்ன கொஞ்ச எண்ணை மிஞ்சும். வெளிச்சம் இல்லாத எண்ணையை வச்சு என்னதான் செய்யிறது"


அம்மாவின் முகத்தில் எதையோ தேடினான். தூரத்தில் எழுந்த நாய்களின் ஊளைச்சத்தம் அவன் சிந்தனையைச் சூறையாடியதும், அம்மாவின் முகத்தில் கடந்த காலக் கவலைகளின் சுருக்கங்கள், இனி வருங்காலப் பயன்கள்......இது தவிர அவளால் எதையுமே கண்டுகொள்ள

தொடர்ச்சி 12ம் பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## வெற்றிடம் நிரப்ப

- கருணை ரவி

உன்
முகவரி
தெரியாததால்
முகம் காணமுடியவில்லை.

ஊர் இழந்து
உறவுகளோடு சென்றிருப்பாய் .......
பேச்சு இழந்து
ஊமையாகிப் போயிருப்பாய்
வீட்டை நினைத்து

அடுக்கு மாடியைசுற்றி
அடுக்கடுக்காய்!
வளர்த்த
பூச்செடிகள் போல் – நானும்
வாடுகின்றேன்
உன்முகம் காணாது!

கண்ணீரில்
காகிதம் நனைகிறது .......
தண்ணீரில்
வெடிமருந்துடன் படகு
எனக்காக காத்து நிற்கிறது.

பெற்றவளே ......
இறுதியாய் ஓர் வரி!
என் வெற்றிடம் நிரப்ப
தம்பியை அனுப்பி வை!
எங்கள் மாடியைச் சுற்றிய
பூச்செடிகள் – மீண்டும்
மதாளிக்கவேணும். ❒

### போராளியின் பேனாவிலிருந்து

## என் துடிப்போடு எனதுலகம் அசைவுறட்டும்

– அம்புலி

எனது நினைவுகளில்
அழிக்க முடியாத வடுக்களை – நீ
ஆழப்பதித்து விட்டாய்.
துயரையும் சுமைகளையும் – நான்
நெடுநாட்களாய்ச் சுமக்கிறேன்.
ஆனால் இந்த வடுக்கள்
இந்த வரலாறு இருந்ததென்று
உரைக்கின்ற
காலமெதிலுமே கரையப்போவதில்லை.

எனது எதிர்காலத்திற்காய் – நான்
கட்டிவைத்த கூட்டைக் குதறி
இட்டு வைத்த முட்டைகளைக் கலக்கி
ஒரு சிதைவுற்ற எதிர்காலமாய்த்
தரவந்தவனே!
ஒரு இறப்போடு இல்லாமற் போய்விடினும்
மகிழ்ந்திருப்பேன் – ஆனால்
நான் வளர்த்த கனவுக்குள்
களங்கமிட்டாய்
கண்ணீரிற் கரைக்க முடியாத
துன்பத்தை நீ தந்தாய்

என் ஆத்மா அவலப்பட
பிறழ்வற்ற நெறியை
ஒரு பொழுதுக்குள்
பொசுக்கி விட வந்தாய்.

எனது வாழ்வு தூய்மையானது.
நாளைய பொழுதுக்காய்
செதுக்கி வைத்த என் சிற்பங்கள்
சுத்தமானவை.
எனது உதிரத்தில் உதித்தெழுந்த
கனவுகள் உன்னதமானவை.
எனது பூமியை மிதித்து
அகல விரித்த உன் கால்களால்
என் ஆழத்தை ஒருபோதும்
அறியவே முடியாது.

இரத்தம் கசியும் எனக்குள்
எரியிட்ட உனது செயலுக்காய்
வரலாற்றில் என்றுமே – நீ
வருந்திக் கொண்டிருப்பாய்.

எனது நீண்ட நகர்வில்
இத்தாமதம் சிறிது – ஆயினும்
என்னுள் நான் எரிய வைத்தனையே
இவ் வேதனை பெரிது.
எனது முகங்களுக்கு
என்னை வேற்றவனாய் ஒப்புவிக்க
எத்தனை நாளுனக்கு முடியும்.

உனது சிறைகளை விட
உன்னால் விழையுங் கொடுஞ்சாவை
வரவேற்கும் என்னைக்
கொல்! எரி! வேரோடு வெட்டியெறி!

ஆனால்,
என் இளமைக் காலத்திற்காய்
எருவிட வேண்டாம்.
எனது கண்ணீரைத் துடைக்கவேண்டாம்
வீழுந்தேன் என்று கைதூக்க வேண்டாம்
உனது தாலாட்டையும்
அமுதூட்டலையும் என்னால்
என்றுமே ஏற்க முடியாது.

கருக்க முடியாத என் கருக்கள்
மீண்டும் துளிர்விடும்
எரிந்த சாம்பலினின்றும் எழும் பறவையாய்
என்னுள் பறக்கும் புதியவைகள்
ஒருநாளும் புண்பட்டுப் போகாது.

எனக்காய் விடியும் ஓர் பொழுதில் – நான்
பிணமாய் இருப்பினும் அதுபோதும்
எனது துகள்களுக்குள்
முளைக்கும் துடிப்போடு
எனது உலகம் அசைவுறட்டும். ✷

## காலம் இன்னும் கடந்து போகவில்லை எழுக!

- புதுவை இரத்தினதுரை

தனக்கென்றோர்
தனிக்கூடும்
கூட்டைச் சுற்றிய கிடுகுவேலியுமாக
எட்டப் பார்வைக்கு ஒன்றாகவும்
தொட்டுப் பார்த்தால் பலவாகவும்
முட்டைக்குள் கருவாக அந்தரத்திலாடும்
வித்தியாசமானவராக இருந்தோம்.
எதிலும் ஒட்டாத தனியுலகம் எமது.
சீட்டு
வட்டி
சீதனம்
கிணற்றுப்பங்கு
நடுத்தின்னை ...... செம்புதண்ணீர்
வாய்நனைத்தல்
தேசவழமை ......... சிறைக்குடிகள்.
தலைகுனிந்து வெட்கப்படவேண்டியவற்றுக்கு
தலைப்பாகை கட்டிச் சபையிருத்தினோம்.
நெருப் பெரிக்கவேண்டிய நீசத்துக்கு
பட்டாபிசேகப் பவிசளித்தோம்.
வெள்ளைக்காரனைத் "துரை"யென்ற பழக்கத்தில்
எல்லோரையும் "சேர்" என்றோம்.
எமக்கு
சுண்டுக்கிளிக்குப் பேச்சுப் பழக்கப் பிடிக்கும்.
சிட்டுக்குருவியை ரசிக்கத் தெரியாது.
நிமிர்ந்தசெருக்கு கொஞ்சமும் பிடிக்காது.
அடிமைவாழ்வே ஆனந்தம்.
குனிந்து கொள்வதே குபேரவாழ்வு.
காற்கொத்தரிசியிலும் பிடியரிசியுள்ளும்
கஞ்சத்தனத்துக்குத் தாலிகட்டியவர்
வேறெவருமிலர் ........ நாங்கள்தான்.
எதற்குமொரு எல்லையிட்டு
அதற்குளொரு வாழ்வமைத்த பரம்பரைக்கு
என்னாச்சு இன்று?
எதிரி வேட்டைநாய்களாகத் துரத்த
ஒவ்வொரு ஊராக ஓடும்
நரகல் வாழ்வில் நாம்.
ஆயினும் புத்திகைவரப் பெற்றோமா?
அதுதானில்லை
விடியாத திசையாத இருளில் இருக்கின்றோம்.
யார் கை நீட்டினாலும்
ஓடிப்போய் தோளிற் குந்தும் சிரியராய் நாம்.
வெளியிற் சொன்னாலே ....... வெட்கம்.
கங்கைகொண்டான் தமிழன்.
கடாரம் வென்றான் தமிழன்.
சொல்லிவிட்டுக் கிடாரத்தை இறக்கி
சோற்றுக்கு ஊறுகாய் தேடினோம்.
கறிக்கு பெருங்காயம் போட்டோமன்றி
சுதந்திரத்துக்குச் சுவைசேர்க்க மறந்தோம்.
எல்லாவற்றுக்கும் வட்டியும், முதலுமாய்
வாசலுக்கு வந்தது பலன்.
ஓட ஓட விரட்டுகின்றான் பகைவன்.
நாக்கிழுக்க ஓடுகின்றோம் நாம்.
என்றாலும் ஞானம்விடிந்ததா நமக்கு?
அதுதானில்லை .......
நாயினும் கடையராய்க் கிடக்கின்றோம்.
உப்புப் போட்ட கருவாடாய் உயிர்ப்பின்றி
இப்போதும் இருக்கின்றோம்.
சித்திரைச் சிறுமாரிக்கு
பிஞ்சுதிர்த்த மாமரத்து அடிபோல
நிலத்தில் சிதறிக்கிடக்கவா பிறப்பெடுத்தோம்.
யாரோ அடுப்பெரிக்க
அதிலே குளிர்காய நினைக்கின்றோம்
கூடாது.
காலம் இன்னும் கடந்து போகவில்லை.
எழுக. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலக அரங்கு

- சாள்ஸ் தேவசகாயம்

## ஹொங்கொங்கின் எதிர்காலம் சுபீட்சமானதா?

இன்னும் பதினொரு மாதங்களில், அதாவது 1997 யூலை மாதம் முதலாம் தேதியன்று பிரித்தானிய காலனியான ஹொங்கொங் மீண்டும் சீனாவுக்குத் திருப்பியளிக்கப்படவுள்ளது.

பொறுப்பேற்கும் சீனக் கம்யூனிசத் தலைவர்கள், முதலாளித்துவ வாழ்க்கை முறையில் பழகிப்போன ஹொங்கொங் வாசிகளை எவ்வாறு நடாத்தப் போகின்றார்கள் என்பதே இன்றுள்ள பில்லியன் டாலர் கேள்வியாகும்.

பிரித்தானிய 'பொருளாதாரக் கிரீடம்' என அழைக்கப்படுகின்ற ஹொங்கொங், குரங்கின் கைப் பூமாலையாகுமா எனப் பலர் ஆதங்கப்பட்ட வண்ணமுள்ளனர்.

ஹொங்கொங்கில் தற்போது நிலவும் ஜனநாயக முறைகள், மனித உரிமைகள் என்பன பேணிப் பாதுகாக்கப்படுமா என்பதும் பலர் மனதில் எழும் கேள்வியாகும்.

உலகின் மூன்றாவது பெரும் பொருளாதாரத்தைக் கொண்டு விளங்கும்

> ஹொங்கொங்கில் தற்போது நிலவும் ஜனநாயக முறைகள், மனித உரிமைகள் என்பன பேணிப் பாதுகாக்கப்படுமா என்பதும் பலர் மனதில் எழும் கேள்வி யாகும்.
>
> உலகின் மூன்றாவது பெரும் பொருளாதாரத்தைக் கொண்டு விளங்கும் ஹொங்கொங்கின் நிச்சய மற்ற எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பலர் வெளி நாடுகளில், குறிப்பாக மேற்கு நாடுகளில் புகலிடம் தேடிய வண்ணமுள்ளனர்.

ஹொங்கொங்கின் நிச்சயமற்ற எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு பலர் வெளிநாடுகளில், குறிப்பாக மேற்கு நாடுகளில் புகலிடம் தேடிய வண்ணமுள்ளனர். கனடாவுக்கு மட்டும் வருடாவருடம் சுமார் 30 ஆயிரம் பேர் கொங்கொங்கில் இருந்து குடிவரவாளர்களாக வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கொங்கொங் தீவானது, 1842 இல் பிரித்தானியாவின் ஆளுமைக்குட்படுத்தப்பட்டது. அருகிலுள்ள கவ்லூன் குடாநாடும் 1860இல் பிரித்தானியாவினால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து சீனப் பெருநிலப்பரப்பின் பகுதிகள் சிலவற்றைச் சீனா 1898இல் பிரித்தானியாவுக்குக் 99 வருடங்களுக்குக் குத்தகைக்கு விட்டது.

1949இல் சீனப் பெருநிலப்பரப்பைக் கம்யூனிசவாதிகள் கைப்பற்றிக்கொண்டதனை அடுத்து, ஏராளமான சீனக் குடிமக்கள் கொங்கொங்குத் தப்பி வந்தனர்.

உலகின் எந்தவொரு நாட்டு உழைப்பாளர்களையும் பார்க்க கொங்கொங்கில் உள்ளவர்களின் சராசரி உழைப்பு நேரம் மிகவும் உயர்வானது என்பது குறிப்பிடத்தக்கது.

கீழைத் தேசத்தவர்களின் அணுகுமுறைகள், மேலைத்தேய தொழில் நுட்பம் என்பன கொங்கொங்கை உலகின் எட்டாவது பெரிய வர்த்தக அலகாக மாற்றியுள்ளன. ஆடையணிகள், கைக்கடிகாரங்கள் என்பனவற்றை உலகில் மிக அதிகமாக ஏற்றுமதி செய்வது கொங்கொங் ஆகும்.

உலகின் எட்டாவது பெரிய பங்குச் சந்தையையும், ஆசியாவின் இரண்டாவது பெரிய பங்குச் சந்தையையும் கொங்கொங் கொண்டு விளங்குகிறது.

அது மட்டுமல்ல, இன்று உலகில் உள்ள மிகவும் சுறுசுறுப்பான 50 மக்டொனால்ட் உணவுச் சாலைகளில் 25 கொங்கொங்கில் அமைந்துள்ளதுடன் தாலா வருமானப்படி பார்ப்பின் ரோல்ஸ்ரொயிஸ், மேர்சிடிஸ் பென்ஸ் எனும் ஆடம்பரக் கார்களின் உரிமையாளர்கள் கொங்கொங்கிலேயே அதிகமாக உள்ளதனையும் அவதானிக்க முடிகிறது.

இன்று கொங்கொங்கின் 6.3 மில்லியன் சனத்தொகையில் சுமார் ஒரு மில்லியன் பேர் பிறநாட்டு குடியுரிமையுடையவர்களாகவுள்ளனர். இவர்களில் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் பேர் கனேடியர்களாவர்.

கொங்கொங்கின் சட்டசபைத் தொகுதி ஒன்றிற்கு கடந்த வருடம் கனேடியர், பிரித்தானியர் மற்றும் ஆஸ்த்திரேலிய வேட்பாளர்கள் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

கொங்கொங்கின் சீனக் குடிமக்கள் வெளிநாட்டு குடியுரிமையுடையவர்களாகவும் இருப்பதற்கு சீனாவின் கம்யூனிச அரசியல்வாதிகள் முதலில் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் கொங்கொங்கின் வளர்ச்சிக்கு வெளிநாட்டவர்களும் முக்கிய பங்குவகித்ததனால் இக்கொள்கை பற்றி அவர்கள் தற்போது அலட்டிக்கொள்வதில்லை.

கொங்கொங்கைப் பொறுத்தவரை அங்கு விற்பனைவரி அறவிடப்படுவதில்லை. ஆனால் அங்குள்ளோரின் வருமானவரியாக 15 வீதம் சகலரிடத்திலும் அறவிடப்படுகிறது.

ஏனைய நிறுவனங்களிடம் 2 வீதம் மேலதிகமாக அறவிடப்படுகின்றன.

இவ்வருட வருடாந்த வரவு, செலவுத்திட்டத்தில் 440 மில்லியன் டாலர்கள் மேலதிக வருமானம் கிடைத்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, இத்தகைய 'பொன்முட்டையிடும் வாத்தைப்' பத்திரமாக வைத்திருக்கவே சீனக் கம்யூனிசவாதிகள் முயல்வர் என அவதானிகள் கருதுகின்றனர்.

தம்மை விமர்சிப்பவர்களைப் பொய்யாக்குவதற்காகவேனும், சீன அரசியல்வாதிகள் பொறுமையைக் கடைப்பிடிப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதுள்ள சனநாயக, மனித உரிமைகள், முதலாளித்துவ வாழ்க்கை முறையில் மாற்றமேதும் ஏற்படாத வண்ணம், எதிர்வரும் 50 வருடங்களுக்கு விசேட நிர்வாகப் பிரதேசமாக கொங்கொங் தன்னைத்தானே ஆள்வதற்கு இடமளிக்கப்படும் என கம்யூனிச சீன அதிகாரிகள் உத்தரவாதமளித்துள்ளனர். இதேவேளை, கடலின் அடியில் இருக்கும் மண்ணை அப்புறப்படுத்தும் இயந்திரங்கள் கொங்கொங்கில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றன. உலகில் உள்ள இத்தகைய இயந்திரங்களில் அரைவாசி இங்கு பாவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு கடலின் அடியில் இருந்து எடுக்கப்படும் மணலானது குவிக்கப்பட்டு அதன் மூலம் தரைப்பகுதி உருவாக்கப்பட்டு அதில் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதில் புதிய மாநாட்டு நிலையம் ஒன்றும் எழுப்பப்பட்டு வருகின்றது.

ஒரு தீவொன்றும் தரைமட்டமாக்கப்பட்டு, புதியதொரு விமான நிலையம் ஒன்றும் கட்டப்பட்டு வருகின்றது. இவ்விமான நிலையத்திற்காக விக்டோரியா துறைமுகத்தின் அடியில் மூன்றாவது சுரங்கப்பாதை அமைக்கும் வண்ணமும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இதேவேளை, இந்நிலையத்துக்குச் செல்வதற்காகப் புதியதொரு தொங்கு பாலம் அமைக்கும் வேலைகளும் இடம்பெற்று வருகின்றன. இது உலகின் மிக நீளமான தொங்குபாலமாக அமையும்.

எனவே, இவ்விரிவாக்கம் தொடர்ந்து இடம்பெறுமானால், சீனக் கம்யூனிசத் தலைவர்களும் தாம் உறுதியளித்ததுபோல் அதிகம் தலையிடாமல் இருப்பார்களேயானால், கொங்கொங்கின் வளர்ச்சி தொடர்ந்துகொண்டேயிருக்கும் என எதிர்பார்க்கலாம். ✷

## புறுண்டியில் மீண்டும் பாரிய இனக்கலவரம் ஏற்படுமா?

புறுண்டியின் ஜனாதிபதி சில்வெஸ்டர் என்டி பான்டூன்கான்யா அமெரிக்க தூதராலயத்தில் தஞ்சமடைந்ததனைத் தொடர்ந்து, இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி புயோயா என்பவரை ஜனாதிபதியாக்கியுள்ளது.

46 வயதுடைய இவர் மிதவாதி என்றும் சென்ற முறை, 1987க்கும் 1993க்கும் இடையில் இவர் இராணுவத்தினால் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டபோது, பல் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தினார் என்றும் அறிய வருகிறது.

ஜனாதிபதி பதவியைப் பொறுப்பெடுத்துக்கொண்ட புயோயா, ஹீட்டு இனப் போராளிகள் வன்முறையைக் கைவிட்டு, ஆயுதங்களை ஒப்படைத்தால், தான் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவேன் எனக் கூறியுள்ளார்.

எனினும் அண்டை நாடான கென்யாவில் இருந்து இயங்கிவரும் ஹீட்டு இனப் போராளிகள், புயோயாவின் வேண்டுகோளை உதாசீனம் செய்ததுடன், தமது கெரில்லாப் போரை விஸ்தரிக்கப்போவதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, இராணுவ ஆட்சிக் கவிழ்ப்பையடுத்து இனக் கலவரம் அதிகரிக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என இலண்டனில் இருந்து இயங்கும் அம்னஸ்டி இன்டர்நஷனல் எனும் மனித உரிமைகள் நிறுவனம் அச்சம் தெரிவித்துள்ளது.

தற்போது ஒவ்வொரு மாதமும் சுமார் 1000 பேர் வரை இனக் கலவரங்களில் கொல்லப்படுகின்றனர் என மனித உரிமை நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்றுவரும் இவ்வன்முறைகளின் விளைவாக 150,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியில் 6 மில்லியன் சனத்தொகையில் ஹீட்டு இனத்தவர் 85 வீதமாக விளங்குகின்றனர். எனினும் சிறுபான்மை இனத்தவரான டுட்சி இனத்தவரின் ஆழுமையின் கீழேயே புறுண்டியின் இராணுவம் செயற்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

1994ல், அண்டை நாடான றுவாண்டாவில் இவ்விரு இனத்தவருக்கிடையே ஏற்பட்ட வன்முறை மோதல்களில் 5 இலட்சத்துக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டமை இங்கு கவனிக்கத்தக்கது. இதேபோன்ற நிகழ்வு புறூண்டியிலும், ஏற்படக்கூடாது என மேற்குலக நாடுகள், நிவாரண உதவி வழங்கும் நிறுவனங்கள், மனித உரிமை அமைப்புக்கள் என்பன கரிசனையுடன் இருக்கின்றன.

ஒரு கிழமைக்கு முன்னதாக ஹீட்டு இனப் போராளிகள் மத்திய புரூண்டியில் உள்ள ஒரு கிராமத்தைத் தாக்கி அங்குள்ள சுமார் 300 டுட்சி இனத்தவரைப் படுகொலை செய்ததனை அடுத்தே, அண்மைய நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன.

இப்படுகொலையில் இறந்தவர்களின் மரணச் சடங்குகளில் கலந்து கொள்வதற்காக வந்த ஜனாதிபதி சில்வஸ்டர் மீது, டுட்சி இனத்தவர் கற்களைச் சரமாரியாக வீசத் தொடங்கினர். இதனைத் தொடர்ந்து இவர் தலைநகரான புஜீம்புராவுக்கு மீண்டும் வந்தபோது, இராணுவக் கவிழ்ப்பு ஒன்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதனை அறிந்துகொண்டதனால்,

> மத்திய ஆபிரிக்க நாடான புருண்டியில் 6 மில்லியன் சனத்தொகையில் ஹீட்டு இனத்தவர் 85 வீதமாக விளங்குகின்றனர். எனினும் சிறுபான்மை இனத்தவரான டுட்சி இனத்தவரின் ஆழுமையின் கீழேயே புறுண்டியின் இராணுவம் செயற்படுகின்றது.

அமெரிக்க தூதராலயத்தில் சரணடைந்தார்.

புரூண்டியின் சட்டரீதியான அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிக்கு ஐ. நா. பாதுகாப்புக் கவுண்சில் எதிர்ப்புத் தெரிவித்து எச்சரிக்கை விடுத்திருந்ததற்கும் மாறாக, புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும், ஐரோப்பாவில் பயிற்றப்பட்ட டுட்சி இன முன்னாள் இராணுவ மேஜரான புயோயா சர்வதேச சமூகத்தவர் மத்தியில் தன்மதிப்புடன் இருப்பவர் என 'கெயர்' நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பாரிய இனக் கலவரம் ஒன்றைத் தவிர்க்க முயற்சி செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "என் முகத்தை போராளிகளின் முகத்தில் பார்த்துக்கொள்"

. கடற் கரும்புலி லெப். கேணல் ரதீஸ்

சிறிலங்கா அரச படைகளினது அதிஉயர் பாதுகாப்பு வியூகங்களை ஊடறுத்து கொழும்புத் துறைமுகத்துள் 12-04-96இல் நடாத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலில் ஆறு பெரும் கப்பல்களை மூழ்கடித்து வரலாற்றுப் புகழ்மிக்க சாதனையை நிகழ்த்தி வீரச்சாவடைந்த ஒன்பது கரும்புலிகளின் அணிக்குத் தலைமை தாங்கிச் சென்ற கடற்கரும்புலி லெப்.கேணல் ரதீஸ் அவர்கள் 28-03-96இல் தனது பெற்றோருக்கு எழுதிய இறுதிக் கடிதம்.





28-03-1996
கடற்புலிகள்

அன்புள்ள அம்மா அப்பாவிற்கு, உங்கள் மகன் இறுதி நேரத்தில் எழுதிக் கொள்வது!


இக்கடிதம் வாசிக்கும்போது உங்கள் மகன் கரும்புலி என்ற பெயருடன் மாவீரனாகி இருப்பான்.

ஏற்கனவே ஓர் பிள்ளையைப் போராட்டத்தில் கொடுத்துவிட்டாய். நானும் இல்லை என்றால் உன் மனம் இதைத் தாங்காது என்பதை நானறிவேன். ஆனாலும் என் தாய்ப் பாசத்தைவிட, தாய்நாட்டுப் பாசம் என்னுள் மேலோங்கிவிட்டது. ஆகவேதான் நான் கரும்புலியாகச் செல்கிறேன். இதை உங்கள் மனம் தாங்காது என்பதை அறிவேன். ஆனாலும் தவிர்த்துக்கொள். போராட்டத்தில் ஊறிய உங்களுக்கு இது புதிதல்ல. நான் இயக்கத்தில் இணைந்ததிலிருந்தே என் மனதில் உருவான ஓர் உணர்வு - சிறு தென்றலாக உருவான உணர்வு படிப்படியாக வளர்ச்சி பெற்று புயலாக மாறிவிட்டது. இதற்குக் காரணம், கடலிலே கடற்படையின் வெறியாட்டம். தரையிலே எங்கும் இராணுவத்தின் கொடூரமான கொலைச் சம்பவங்கள். இவையே என்மனதை மிகவும் பாதித்துவிட்டது. ஆகவே இதற்கெல்லாம் பதிலடி கொடுக்கவே நான் கரும்புலியாகச் செல்கிறேன்.

என்னுடைய வீரச்சாவு நிகழ்வுகளை வடமராட்சியில்தான் செய்ய வேண்டும். பிரச்சினை இல்லாவிட்டால், வீட்டுக்கு வரும் போராளிகளை மிகவும் அன்பாக உபசரிக்கவும். அவர்களைத் தூக்கி எறிந்துவிடாதே. என் முகத்தை அப்போராளிகளின் முகத்தில் பார்த்துக்கொள். மற்றும் அக்காவிடம் கவலை அடைய வேண்டாம் என்று சொல். அண்ணாவை வெளிநாட்டு வாழ்க்கை வாழ்ந்தது போதுமென்று சொல்லி, உன்னுடன் இருக்கச் சொல். அவரின் கல்யாணத்தை நான் மேலிருந்து எனது சக மாவீரர்களுடன் ஆசீர்வதிப்பேன். வேறு இல்லை. எனது படம் வேண்டுமானால் மனோவிடம் அல்லது ரம்போவிடம் கேட்கவும். அல்லது கங்கை அமரண்ணையிடம் கேட்கவும். வேறு குறிப்பிடும்படியாக ஒன்றும் இல்லை.

நன்றி.

இப்படிக்கு,
என்றும் பாசமிகு உன் மகன்
பிரதாபன்
ரதீஸ்.





Printed by Observer Group Newspapers, Upton Court, Slough, Berks. Tel. (01753) 523355.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்